
# சித்தாந்தம்

30 1-2

ஜனவரி - பிப்ரவரி, 1957



7L
R673m211, N28
N57.30.1-2
இஒ 304

No. M. 2330

SIDDHANTHAM
Vol. 30—No. 1

# ...த்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே'

துன்முகி தை 1957 ஜனவரி | இதழ் 1

உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| ஆண்டுவிழா | ... | 1 |
| 51-ம் ஆண்டுவிழாவின் வரவேற்புரை | ... | 2 |
| 51-ம் ஆண்டறிக்கை | ... | 14 |
| இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை | ... | 17 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 JAN 1957
MADRAS

...சிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

...துணைப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

2, சீதாராம நகர், கடலூர் N. T.

ஆண்டுச் சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

# சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை

## சமாஜம் நடத்துகிற சைவத்தேர்வுகளின் பாடத் திட்டம்

### இளஞ்சைவப் புலவர் தேர்வு 1957-ம் ஆண்டு

சைவ இலக்கியம்—(1) ஞானியார் சுவாமிகள் "விநாயகப் பிரபாவம்" பற்றிய விரிவுரை (2) பாம்பன் சுவாமிகள் "பரமசிவனைக் குறித்த வியாசம்" (3) திருக்குறள் முதல் பத்து அதிகாரங்கள் (கடவுள் வாழ்த்து முதல்) பரிமேலழகர் உரையுடன் (4) அகத்தியர் தேவாரத் திரட்டு முதல் பத்துப் பதிகங்கள் (கயப்பாக்கம் சதாசிவ செட்டியாருரையுடன்).

சைவ சாத்திரம்—(5) திருவருட் பயன் - திரு. சிவப்பிரகாச சுந்தரம் உரையுடன் (யாழ்ப்பாணப் பதிப்பு) (6) சிவஞான சித்தியார் முதல் சூத்திரம் சிவாக்ர யோகிகள் உரையுடன்- இவற்றுள் 1, 2, 6, நமது சமாஜத்திலும், 3 பல புத்தக வியாபார நிலையங்களிலும், 4 தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்திலும், 5 யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை "இந்து சாதனம்" காரியாலயத்திலும் கிடைக்கும்.

### சைவப் புலவர் தேர்வு 1957-ம் ஆண்டு

சைவ இலக்கியம்—(1) தேவாரம் முதல் திருமுறை உரையுடன் (தருமபுர ஆதீன வெளியீடு) (2) பெரியபுராணம் முழுமையும் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் உட்பட (சமாஜ வெளியீடு) (3) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க. வச்சிரவேல் முதலியார் எழுதியது) (4) பாம்பன் சுவாமிகள் உரை நடை நூல்களில் சுமார் 200 பக்கங்கள் (விவரம் சமாஜக் காரியதரிசியிடம் அறிக).

சைவ சாத்திரம்—(5) சிவஞானபோதச் சிற்றுரை (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருவள்ளுவரகம் ப. இராமநாத பிள்ளை விளக்கவுரை) முழுமையும் (6) சிவஞான பாடியம் முதல் இரண்டு சூத்திரங்கள் முழுமையும் (சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு). தேர்வு 1957ஆம் அக்டோபர்மீ மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையன்று இந்தியாவிலும் இலங்கையிலும் வசதியுள்ள இடங்களில் நடைபெறும். மற்ற விவரங்கட்கும், அச்சிட்ட விண்ணப்பத்தாள்கட்கும் சமாஜக் காரியதரிசிக்கு எழுதுக.

Reg. M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவற்
ஞானகுரு வானவையுள் நாடு.

மலர் 30 | துன்முகி தை 1957 ஜனவரி | இதழ் 1

## சமாஜ ஆண்டு விழா

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 51-ம் ஆண்டு நிறைவு விழா மிக மிகச் சிறப்பாக 1956-ஆம் டிசம்பர் 30-ம் தேதி முதல் மூன்று நாட்களில் திருப்பெண்ணாகடத்தில் மெய்கண்டார் திருக்கோயிலுக்கருகிலுள்ள மாந்தோப்பில் நடந்தது. தலைமை வகிக்க ஏற்பாடு செய்யப்பெற்ற மயிலம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய தேசிக சுவாமிகள், தமது மூத்த புதல்வர் சிவலிங்கைக்கியமானதை முன்னிட்டு வர இயலாமற் போயிற்று. சென்ற ஆண்டில் சிதம்பரத்தில் பொன்விழாவில் தலைமைவகித்த திரு. சு. நடேச பிள்ளை, பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமை தாங்கினார்கள். சைவ மங்கையர் மாநாட்டிற்குத் திரு. கற்பகவள்ளியம்மையாரும், இளைஞர் மாநாட்டிற்குத் திரு. புலவர் முருகவேள் அவர்களும் தலைமை தாங்கினார்கள். விழாவின் முழு விவரமும், தீர்மானங்களும், உத்தியோகஸ்தர் தேர்தல் முடிவும் அடுத்த இதழில் வெளிவரும்.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

51-வது ஆண்டு நிறைவு விழாவின்

# வரவேற்புரை

திரு. ச. அரங்கசாமிப் பிள்ளை,
(வழக்கறிஞர், [illegible]) வரவேற்புக் குழுத் தலைவர்
பெண்ணாகடம்.

சைவ சித்தாந்த சமய சிவஞானச் செல்வர்களுக்கு வணக்கம்.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 51-வது ஆண்டு விழா மெய்கண்டாரின் அவதார தலமாகிய பெண்ணாகடத்தில் அவருடைய தகப்பனாரான அச்சுத களப்பாள ராஜாவின் அரண்மனை இருந்த இடமான "களப்பாள மேடு" என்று சொல்லும் இடத்தில் இப்போது நடக்க ஏற்பாடு செய்தது மிகவும் பொருத்தமானது. (இங்கு போதிய இட வசதி தற்போதின்மையால், அருகிலுள்ள மாந்தோப்பில் இது நடக்கிறது.) இம் மகா சமாஜத்தின் பொன்விழா சென்ற ஆண்டில் சிதம்பரம் என்கிற தில்லை நகரில் நடந்தது. "தில்லை மூவாயிரம் கடந்தை ஆறாயிரம்" என்பது பழமொழி. சிதம்பரம் 3000 தீக்ஷதர்களைக்கொண்ட இடம். பெண்ணாகடம் என்கிற கடந்தையோ 6000 அந்தணர்களைக் கொண்டது. பெண்ணாகடம் என்கிற கடந்தையோ ஆதியில் இப்போது பல கிராமங்களாக இருக்கிற அவ்வளவு கிராமங்களையும் சேர்ந்த ஒரு நகரமாக இருந்தது. அக்காலத்தில் அந்த கடந்தை நகரில் ஒவ்வொரு வகுப்பினர் இருந்த ஒவ்வொரு பாகமும் இப்போது ஒவ்வொரு கிராமமாக இருக்கிறது. இப்போது "குசப்பள்ளம்" என்று வழங்குகிற ஊரானது அந்தக்காலத்தில் கடந்தை என்ற நகரத்தில் குயவர்கள் வசித்த "குசப்பாளயம்" என்று இருந்த பாகமாகும். இதுபோல அந்தணர்கள் ஆறாயிரம் இருந்த இடத்திற்குப் பாப்பான்குளம் என்று பெயர். இம்மாதிரி 6000 அந்தணர்கள் வசித்த கடந்தையில் தில்லை மூவாயிரம் கடந்தை ஆறாயிரம் என்கிற பழமொழியை அனுசரித்து,



சிதம்பரம் என்கிற தில்லைக்கு அடுத்தபடியாகக் கடந்தை என்கிற பெண்ணாகடத்தில் இந்த விழா நடப்பது மிகவும் பொருத்தமானது.

பெண்ணாகடத்தின் பெருமை அளவிடக்கூடியது அல்ல. ஆனாலும் முக்கியமாக சைவ சமய குரவர்களில் அப்பர் அடிகள் சைன சமயத்திலிருந்து சைவ சமயத்திற்குத் திரும்ப சேர்ந்ததற்கு அடையாளமாக ஸ்ரீ சுடர்க்கொழுந்து ஈசுவரரிடம் இடப முத்திரையும் சூல முத்திரையும் பெறப்பட்ட தலமாகும். தேவாரத்தில், அப்பர் அடிகள் என்கிற திருநாவுக்கரசு ஸ்வாமிகள், திருஞான சம்பந்த ஸ்வாமிகள் ஆகிய இவர்களின் பாசுரத்தைப் பெற்றுள்ளது இந்த தலம். சந்தானகுரவர்களில் முதல்வரான மெய்கண்டார் அவதாரத்தலம். மூன்றுவதரான மறைஞான சம்பந்த சிவாச்சாரியார் அவதாரம் செய்ததாக ஒரு சார்பாரும், மருதூரில் பிறந்து இங்கு வளர்ந்ததாக மற்றொரு சார்பாரும் சொல்லும் இடம். புராணத்தின்படி ஒரு பிரளய காலத்தில் அந்த பிரளயத்திலிருந்து காக்க வேண்டியதற்காக நந்திதேவரை வலி பிரளய வெள்ளத்தை உறிஞ்சல் செய்த பிரளய காலேசுவரர் என்கிற சுடர்க்கொழுந்தீசர் எழுந்தருளியிருக்கும் தூங்கானை மாடம் என்னும் கோயிலை உடைய தலம். மற்றொரு காலத்தில் தேவேந்திர லோகத்திலிருந்து வந்து கன்னிமார்கள் (பெண்), காமதேனு என்கிற பசு (ஆ), ஐராவதம் என்கிற யானை (கடம்) ஆகிய இவர்களால் பூசிக்கப் பெற்றதால் (பெண் + ஆ + கடம்) "பெண்ணாகடம்" என்ற நாமமும் பெற்றது இந்தத் தலம்.

சமயத்தில் சைவ சமயம் மேலானது. அது கடவுள், உயிர், உலகம் என்ற மூன்றையும் பற்றி விரிவாக எடுத்துக் காட்டுவது. சைவ சமயம் பழமையானது. உலகம் முழுவதிலும் பரந்த சமயம். தெற்கே கன்னியாகுமரிக்குத் தெற்கிலிருக்கிற ஈழநாடு உள்படவும், கடலில் கொள்ளை கொண்டு போகப்பட்டதாகச் சொல்லும் லெமூரியா நாடு உள்படவும் எங்கும் பரவியிருந்தது சைவ சமயம். மிகவும் பழமை நூலாம் 10-ம் திருமுறையான திருமந்திரத்தில் வருஷத்திற்கு ஒரு பாடலாக 3000-வருஷம் இருந்து 3000 பாடல்கள் பாடின திருமூலநாயனாரும், மேலே சொன்ன கடவுள், உயிர், உலகம் என்கிற (பதி, பசு, பாசம்) மூப்

பொருள்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இது தவிர பண்டைய நூல்களாகிய தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு முதலிய நூல்களும் சைவ சமயம் பரவியிருந்ததற்குச் சான்றாகும். பார்வதி அவதாரம் பண்ணின இடமான இமயமலைக்குத் தென்சாரலில் உள்ள காஷ்மீரம் என்னும் நாட்டில் இந்த முப்பொருள்களைப் பற்றிய சைவ சமயம் வெகுகாலங்களுக்கு முன்னிருந்து அனுஷ்டிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இவ்வளவு பழமையான சைவ சமயம் சிலச்சில காலங்களில் பல காரணங்களைக்கொண்டு பாத கண்டத்தில் மங்கியிருக்கும்படி நேரிட்டிருந்தது.

பிறகு உலகத்தில் புத்த சமயமும், சமண சமயமும் தோன்றி நம் தமிழ்நாட்டிலும் ஒருகாலத்தில் வளர்ந்து இருந்தது. அதற்கு அத்தாக்ஷியாக "மானும் பரந்தெழுந்த சமண் முதலாம் பர சமய இருள் நீங்க சிரந்தழுவும் சைவ நெறி திருநீற்றின் ஒளி விளங்க" என்று அம்பாள் தோத்திரம் உள்ளது. இந்தப் பெண்ணாகடத்தில் நமது சமாஜ 51-வது ஆண்டுவிழா இப்போது நடக்கும் இடமாகிய மெய்கண்டார் பிறந்த இடமான களப்பாளர்மேட்டுக்குச் சமீபத்தில் வடகிழக்கில் கூப்பிடு தொலைவில் ஓர் புத்தர் சிலையும் இருக்கிறது. இந்த இடத்திற்குக் "களப்பாளர் மேடு" என்று சொல்லப்படுவதுபோல் அந்த இடத்திற்குப் "புத்தர் மேடு" என்று வழங்குகிறது. அந்த புத்தர் மேட்டுக்குத் தெற்கில் புத்தர் ஏரி அதாவது 'புத்தேரி' என்று ஓர் குளமும் இப்போதும் இருக்கிறது. இதைப்போலவே சமண சமயமும் அக்காலத்தில் பரந்து இருந்தது. இந்த புத்த சைன சமயங்களை அழித்துச் சைவ சமயத்திற்கு மறுமலர்ச்சி கொடுக்கத் தமிழ்நாட்டில் மாணிக்கவாசகரும், திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் (நான்கு சைவ குரவர்கள்) அவதாரஞ் செய்தார்கள். இவர்கள் தேவாரம், திருவாசகம் முதலிய தோத்திர நூல்கள் மூலமாக சைன, புத்த சமயங்களைக் கண்டித்து மேலே சொன்ன முப்பொருளின் உண்மையை நிலைநாட்டிக் கடவுளினிடத்தில் பக்தி உண்டாகுமாறு செய்து சைவ சமயக் கொள்கையைப் பரவச் செய்தார்கள். திருஞான சம்பந்த நாயனார்



தேவாரத்தில் ஒவ்வொரு பதிகத்திலும் 10-வது பாசுரத்தில் சைன சமயத்தையும், புத்த சமயத்தையும் கண்டிக்கிறார்.

இம்மாதிரி சைன புத்த சமயங்களை அழியச் செய்து அவ்வழி வந்த அரசர்களையும் திருத்தி, நமது சைவ சமயம் தழைத்து ஓங்கும்படி செய்த புண்ணியசீலர்கள் நமது தமிழ் நாட்டில் பிறந்தவர்கள். அப்படி அழிந்துபோன சைன புத்தர் சமயங்களுக்குப் புத்துயிர் கொடுக்க, மதத்தில் ஈடுபடுகிறதில்லை என்ற கொள்கை கொண்டிருக்கும் நமது குடியரசாட்சியில் மேற்கண்ட இரண்டு சமயங்களுக்கு மாத்திரம் தற்போது தனிச் சலுகை காட்டப்படுகிறது மிகவும் விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. "மதத்துக்கு உண்டாகும் அபாயங்களைத் தடுக்க ஒரு மடாதிபதியும் யாதொரு தீவிரமான முயற்சியும் எடுக்கவில்லை" என்று சுப்ரீம் கோர்ட்டு மாஜி முதல் ஜட்ஜ் ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரியாரும் சென்ற 1956௵ ஜனவரி மாதத்தில் திருவனந்தபுரத்தில் நடந்த ஹிந்துமத பிரமுகர்களின் மகா சபையில் சொல்லியிருக்கிறார்.

ஷ்டி. சைவ குரவர்கள் முப்பொருளின் உண்மையைப் பற்றியும், அவைகளுக்குள் உள்ள சம்பந்தத்தைப் பற்றியும் விளக்கம் செய்து காட்டுகிறதற்கு அநேக பாசுரங்கள் இருக்கின்றன. உதாரணமாக திருஞானசம்சந்தரின் திருமுதுகுன்றத் தேவாரத்தில் முதல் பதிகத்தில் 3-வது பாசுரம் "விளையாததோர் பரிசில்வரும் பசு பாச வேதனையொண் தளையாயின தவிர அவ்வருள் தலைவனது சார்பாம்."

இம்மாதிரி தோத்திர மூலமாய் சைவ சமயத்தின் முப்பொருளின் கொள்கையைச் சைவ குரவர்கள் பரப்பிக் கொண்டு வருகையில் சாத்திர உணர்ச்சியும் மக்களிடத்தில் இருந்து வந்தது. சந்தான குரவர்களும் அவதாரம் செய்தார்கள். சந்தானகுரவர்களில் இரண்டாவதான அருணந்தி சிவாசாரியார் வேத ஆகம சாஸ்திரங்களில் வெகு நிபுணராக இருந்தவர். அதனால் அவருக்குச் சகல ஆகம பண்டிதர் என்று பெயர். அருணந்தி சிவாசாரியார் அவர்களுக்கு அக்காலத்தில் குலகுரு என்கிற முறையில் சீடராக இருந்த பெண்ணாகடம் அச்சுத களப்பாளர் என்கிற சிற்றரசர் மகப்பேறு இல்லாமலிருந்த குறையை நீக்கத் தமது குலகுரு தேவாரத்தில் கயிறு சாற்றிப் பார்த்ததில் திருஞானசம்பந்த

ரின் திருவெண்காட்டுப் பதிகம் 2-வது பாசுரம் கிடைத்து அதன்படி அவரும் திருவெண்காட்டுக்குப் போய் முக்குளங்களில் நீராடி வெண்காட்டு நாதனை பூஜித்து வந்ததின் பேரில் வெண்காட்டு நாதரின் அருளால் பின்னிட்டு மெய்கண்டார் என வழங்கும் குழந்தை அவதாரம் செய்தார். இவருடைய தகப்பனார் வீரசொர்க்கம் அடையவும் தாயார் உடனே உயிர்நீத்துவிட்டதின் பேரில் தாய்மாமனார் காங்கய பூபதி வீட்டில் இவர் திருவெண்ணெய்நல்லூரில் வளரும் காலத்தில் மூன்று ஆண்டினுள் ஸ்ரீ பரஞ்சோதி முனிவர் ஷை குழந்தை கடவுளின் அம்சம் என்றும் சாமுசித்தர் என்றும் கண்டு அவருக்கு, தான் நந்திகுரு பரம்பரையில் உபதேசம் பெற்ற சிவஞானத்தை அம்முறையாலே அருளிச் செய்து மெய்கண்டார் என்னும் பெயரையும் வைத்தார். மெய்கண்டாரும் ஷை உபதேச மொழியைக் கேட்டு அவ்விடமிருந்த பொல்லாப் பிள்ளையாருடன் சிந்தித்துத் தெளிந்து, தமிழ்நாடு உய்யும் பொருட்டும், அதன் மூலமாய் உலகமே உய்யும் பொருட்டும் "சிவஞான போதம்" என்னும் நூலை அருளிச் செய்தார். மெய்கண்டார் அவர்களின் ஆணையின்படி அவருடைய குலகுருவும், பின்பு சீடருமான சகலாகம பண்டிதர் என்கிற அருணந்தி சிவாசாரியார் சிவஞானபோதத்திற்கு உரையாகவும் வழிநூலாகவும் சிவஞானசித்தியார் என்னும் நூலை அருளிச் செய்தார். இவருடைய சீடர் மறைஞான சம்பந்த சிவாசாரியார், இவருடைய சீடர் உமாபதி சிவாசாரியார். இவர் தில்லை மூவாயிர அந்தணர்களில் ஒருவர். இவர் சித்தாந்த சாத்திரம் 14-ல் 8-நூலை இயற்றியவர். இவைகளில் சிவப்பிரகாசம் என்பது சிவஞான போத நூலுக்குச் சார்பு நூலாகும்.

மெய்கண்டார் கண்ட சைவ சித்தாந்த சமயத்தை நாடெங்கும் பரவச்செய்யத் தனது சீடர்களான அருணந்தி சிவாசாரியார் முதலிய நாற்பத்து ஒன்பதின்மருக்கு ஞானோபதேசம் செய்து வைத்தார். அந்தந்த சீடர்களும் அவரவரின் சீடர்களுக்கு உபதேசம் செய்துவைத்தார்கள். இம்மாதிரி குருசீடர் பரம்பரையில் வந்தவர்களில் அநேகர்களால் ஏற்படுத்தப்பட்ட பல மடங்களில் முதன்மையான மடங்கள் திருவாவடுதுறை நமசிவாய மூர்த்திகளின் மடா



லயம், காஞ்சிபுரம் கச்சி ஞானப்பிரகாசர் மடாலயம், தருமபுரம் குருஞான சம்பந்தர் மடாலயம், திருப்பனந்தாள் காசிமடம் முதலியவை. இவைகளை ஸ்தாபித்தவர்களும் அவர்களுக்கு உபதேச பரம்பரையில் பின் தோன்றலாக வந்தவர்களும் மகான்களே. இம்மடங்களின் ஆதரவினாலேயும், மடாதிபதிகளின் அருள் உபதேசத்தினாலேயும் நமது சைவ சித்தாந்த சமயம் ஓங்கி வளர்ந்து சைவமக்கள் சிவஞானப்பேறு பெற்றார்கள். மெய்கண்ட சந்தான பரம்பரையிலன்றி வேறு வகையில் சிவஞானப்பேறு அடைய முடியாதென்பது சிவஞானிகள் அனுபவத்தில் கண்ட முடிபு என்று தெரிகிறது.

திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆதி குருவாகிய நமச்சிவாய மூர்த்திகள் அவர்களின் குருவும், உமாபதி சிவாசாரியார் அவர்களின் சீடரான அருணமச்சிவாயரின் சீடர்களில் ஒருவருமான சித்தர் சிவப்பிரகாச தேசிகர் அவர்களின் அந்திய காலத்தில் தனது சீடரான நமசிவாய மூர்த்திகள் அருகில் இல்லாமலிருந்ததனால் "நமது சைவ சித்தாந்த மரபு தழைக்க ஞானோபதேசம் செய்து வருமாறு ஆணைதந்தோம் என்று நமது நமசிவாயனுக்கு உரைப்பீராக" என்று சொல்லிவிட்டு வேதாரண்யத்தில் ஓர் தபோவனத்தில் அருட் பெருஞ்சித்தராய் அமர்ந்தருளினார் என்று திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்ட குருபரம்பரை வரலாற்றிலிருந்து ஏற்படுகிறது.

உமாபதி சிவாசாரியாரின் சீடரான ஷை அருணமச்சிவாயரின் மற்றொரு சீடரான காழி கங்கை மெய்கண்டாரின் குருசீடர் மரபில் வந்த தர்மபுரத்தின் ஆதி குர்வரான குருஞானசம்பந்தர் அவர்களுக்கு ஷையாரின் குருவான திருவாரூரிலிருந்த கமலை ஞானப்பிரகாசர் "அப்பனே, உன்னால் பல ஆன்மாக்கள் பல்லூழிகாலம் வரை ஈடேறத் திருவருள் துணை நிற்கின்றது. ஆதலால் வடக்கே சென்று உபதேச வாயிலாக உண்மையைப் பரப்புக, சித்தாந்த சைவ நெறியை நிலை நிறுத்துக" என்று ஆணை தந்தார் என்று தர்மபுரம் ஆதீனத்தில் வெளியிட்ட குரு பரம்பரை வரலாற்றிலிருந்து ஏற்படுகிறது.

இதனால் பல ஆன்மாக்களும் பல்லூழி காலம் வரையிலும் ஈடேறும் பொருட்டு உபதேச வாயிலாக நமது சைவ

சித்தாந்த நெறியைத் தழைக்கச் செய்ய மடங்கள் ஏற்பட்டதாகத் தெரிகிறது. அதனாலேதான் ஒவ்வொரு ஆதீனத்திலும் பற்பல இடங்களில் கிளை மடங்கள் ஏற்படுத்தி அந்தந்த கிளைமடங்கட்கும் மெய் கண்டார் கண்ட சைவ சித்தாந்த நெறியை உபதேசவாயிலாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த சீடர்களை மடபதிகளாக நியமித்து அவர்களைக்கொண்டு ஞான உபதேச வாயிலாகவே சைவசித்தாந்த நெறியைத் தழைத்து ஓங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

மடங்கள் எதற்காக ஏற்பட்டன என்பதைப் பற்றி இந்தியாவில் பல உயர்நீதிமன்றங்களிலும் செய்த தீர்ப்புகளில் விளக்கியிருக்கிறார்கள். கடைசியாக சென்னை உயர்நீதி மன்றத்தில் சீரூர்மடம் சம்பந்தமாக வியாஜ்ஜியம் நடந்தபோது சென்னை உயர்நீதி மன்றத்தின் (High Court) நியாயாதிபதிகள், அதற்கு முன் பல மாகாணத்து உயர்நீதி மன்றங்களில் பல மடங்களின் வழக்கங்களையும் அவைகள் ஏற்பட்ட காரணங்களைப்பற்றியும் செய்யப்பட்ட பல தீர்ப்புகளையும் ஆராய்ந்து பார்த்துச் சென்ற 1952-௵த்தில் தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். ஷை தீர்ப்பு 1952 1. M. L. J. 557ல் காணப்படுகிறது. ஷை தீர்ப்பில் அடியில்கண்டபடி சொல்லியிருக்கிறார்கள். ஷை தீர்ப்பின் விபரம் :—

“ மடங்கள் பொதுவாக மக்களுக்கு ஞானமார்க்கத்தைக் கற்பிக்க ஏற்பட்ட ஸ்தாபனங்கள். சிறப்பாக அந்தந்த மடங்களும் அந்தந்த மடங்களுக்கு உள்ள ஞான மார்க்கத்தின் வழியை மக்கள் உபதேச வாயிலாகக் கேட்டு அனுபவித்து, கற்பித்துப் பரவச்செய்ய வேண்டியது. இம்மாதிரி உபதேச வரயிலாகக் கற்றுக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தவர்களை நியமனம் செய்து அந்தந்த மடங்களின் கொள்கையைப் பல ஆன்மாக்களும் ஈடேறும் பொருட்டு உபதேச வாயிலாக உண்மையை உணரும்படிச் செய்ய வேண்டும். இம்மாதிரி மடாதிபதிகள் இதுவரை செய்து வந்திருக்கவேண்டும். அந்தந்த மடத்தின் ஆதிகுருவானவர்கள் எந்தக் கொள்கையை நிலைநாட்ட அந்தந்த மடத்தை ஏற்படுத்தினார்களோ அந்தந்த கொள்கையைப் பரவச் செய்து ஆதி குருவின் எண்ணம் நிறைவேறும்படி அவர்கள் இனியும் நடந்து கொள்ளவேண்டும்.”



ஷை கேஸ் சென்னை தீர்ப்பின் பேரில் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போனதில் அந்த சுப்ரீம் கோர்ட்டு நியாயாதிபதிகள் மடாதிபதிகளின் கடமையைப்பற்றி அடியில் கண்டபடி சொல்லியிருக்கிறார்கள். அதன் விபரம் 1954 1. M. L. J. 596ல் காணப்படுகிறது. ஷை விவரமாவது :—

“ மடாதிபதிகள் சமய யார்க்கத்தில் உள்ளவர்களுக்குத் தலைவரும் மேலானவருமாவார். மடத்தின் கடமைகளாவன :—அந்தந்த மடங்களின் சீடர்களிலும் மற்றுமுள்ள அடியார்களிலும் அந்தந்த மடத்தின் கொள்கையைப் பலப்படுத்த வேண்டியதற்காக அந்தந்த சமய சாஸ்திரத்தில் வல்லுநர்களானவர்களைத் தங்களுக்குக் கீழ் குருமார்களாக நியமனம் செய்து அவர்களைக் கொண்டு மற்றுமுள்ள சீடர்களுக்கும் மற்றத் தொண்டர்களுக்கும் சாஸ்திர விசாரணையைக் கற்பித்து, கேட்டு, அவரவர்களும் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடும்படியான பயிற்சி கொடுக்க வேண்டும்.”

மேலேகண்டபடி குருமுகமாக ஞானோபதேசம் அனுக்ரகம் செய்யப்படவேண்டிய அவசியத்தை உணர்ந்து “ ஐயந்திரிபற கற்பித்தல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் முதலியவைகளால் ஞானயாகம் செய்து ஓரறிவு உயிராகிய தாவரம் முதல் ஆறு அறிவு உயிராகிய தேவர் ஈறாய சகல உயிர்களுக்கும் சுத்தாத்வைத சைவ சித்தாந்த சமரச சன்மார்க்க நிலையினை உபதேசித்து ” முத்தி பெறத் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் பல மடங்கள் ஏற்பட்டிருந்ததில் இவ்விடம் விருத்தாசலத்திலேயே மணிமுத்தா நதிக்கரையில் கோவிலுக்கருகில் திருவாவடுதுறை ஆதீனம், தர்மபுரம் ஆதீனம், சூரியனார்கோயில் ஆதீனம், திருவண்ணாமலை ஆதீனம் (குன்றக்குடி), திருவண்ணாமலை ஆதீனம் (துறையூர்) முதலிய ஆதீனங்களுக்கு அவரவர்களாலும் தனித்தனி கிளைமடங்கள் ஏற்படுத்தி மடாதிபதிகளும் வைத்து, சைவ சித்தாந்த சமயத்தைப் பரவச்செய்யப்பட்டு வந்தது. இப்பால் சுமார் 70, 80 ஆண்டுகளாக காலப்போக்கினால் சைவ தவ ஒழுக்கம் நாளடைவில் நழுவும்

காலம் வந்து அவைகள் பிற்போக்கடைந்தன. மக்களின் உணர்ச்சியும் குறைந்துவிட்டது. இப்படிக் குன்றிவரும் சைவசித்தாந்த சமயத்திற்குப் புத்துயிர்கொடுக்க வேண்டியதற்காக சைவ சித்தாந்த மகா சமாஜம் ஏற்பட்டுச் சென்ற 51 வருஷங்களாக நடைபெற்று வருகிறது. அதற்காகவே தான் இம்மாதிரி விழாவில் சைவ நன்மக்கள் பலரும் கலந்து சிவவாழ்வு வாழ்வதற்கான சகல முயற்சிகளும் செய்து திருவருள் துணைகொண்டு நடத்திக்காட்ட முன் வந்திருக்கிறார்கள்.

சைவ மடங்களின் அதிபதிகளும் இப்பால் ஒருவாறு வெளிவந்து சைவ சமயத்தைப் பரவச்செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். திருவாவடுதுறை மகா சந்நிதானம் அவர்கள் அந்த மடாலயத்தில் சரஸ்வதி மகாலில் இருந்த சித்தாந்த சாஸ்திர நூல்கள் உரையுடன் இருந்தவைகளில் சிலவற்றை இப்பால் வெளியிட்டுக்கொண்டு வருகிறார்கள். தர்மபுரம் மடாதிபதிகள் அவர்களும் சுமார் 15-ஆண்டுகளுக்கு முன் சைவ சித்தாந்த மாநாடு நடத்தியும், சில நூல்களை வெளியிட்டும், கலாசாலை வைத்து சாஸ்திரப் பயிற்சிக்குத் தர்மபுரத்திலேயே ஏற்பாடு செய்தும் சென்னையில் ஒரு கிளை மடம் ஏற்படுத்தியும் சில தொண்டுகள் செய்து வருகிறார்கள். திருப்பனந்தாள் மடத்து அதிபதிகளும் சில நூல்களை வெளியிடுவதுடன் கலாசாலை வைத்தும் மடத்துச் சொத்துக்களை வேறு வகையில் போக ஒட்டாமல் பல்வேறு தர்மங்களுக்குத் தனித்தனியாக ஒதுக்கி வைத்து வருகிறார்கள்.

மெய்கண்டார் கண்ட சிவஞான போதம் 9-வது சூத்திரத்தின்கீழ் சொல்லியிருக்கும் உதாரண வெண்பாவில் ஆன்மாவானது கடவுளின் அடிமையாகிய உடைமை என்று பஞ்சாக்கர உபதேசத்தினால் கேட்டு அறிய வேண்டுமென்றும், கடவுளை இதயத்திலேயே இருப்பதாக வைத்து பஞ்சாக்கரத்தினாலேயே பூஜை செய்ய வேண்டுமென்றும், பிறகு நாபித்தானத்திலேயே பஞ்சாக்கரத்தினாலேயே மூலாதார அக்கினியை வளர்த்து ஆகுதி செய்யவேண்டு மென்றும், அதன் பிறகு கோதண்டமாகிய புருவ மத்தியிலே பஞ்சாக்கரத்தினாலே கடவுளைத் தியானம் செய்யவேண்டுமென்றும், இப்படியெல்லாம் செய்தால் (காணமுடியாத ராகு, கேதுக்களை சூரிய சந்திர கிரகண காலங்களில் மாத்திரம் அவர்கள் இருப்பதாக யூகித்துக் காண்பதுபோல்) காண முடியாத கடவுளைக் காணலாம் என்கிறார். அவ்வாறு செய்து கடவுளைக் காண்பதற்குக் குரு உபதேசம் அவசியம். இப்படிக் கடவுளைக் காண்பது மிகவும் அரிது என்று எண்ணித்தான் கடைசி சூத்திரத்தில் சிவநேசர்களோடு கூடிப் பழகும்படிக்கும், அவர்களின் வேடத்தைக் கண்டவுடன் அன்புடன் வணங்கவேண்டுமென்றும், அம்மாதிரியே ஆலயங்களைக் கண்டவுடன் வணங்கவேண்டுமென்றும் சுலபமான வழியையும் காட்டியிருக்கிறார். இம்மாதிரியாவது இக்காலத்தில் செய்தால் அதுவே நாம் சிவப்பேறு அடைவதற்குப் போதுமான சாதகம் ஆகும்.



ஆனால் இம்முறை மாத்திரம் மக்களின் முன்னேற்றத்திற்குப்போதுமானதல்ல. மடங்களின் அதிபதிகளும் முன் காலத்தைப்போல் உபதேச வாயிலாக சுத்தாத்வைத சைவ சித்தாந்த சமயநெறியை நிலை நாட்டினால்தான் மக்கள் சிவ ஞானப்பேறு அடையமுடியும். ஆதலால் அந்தந்த மடாதிபதிகளும் அவரவர்களின் முன்னோர்களைப்போலத் தாங்களும், தங்களிடம் உபதேசம் பெற்ற சீடர்களைக்கொண்டு, ஆங்காங்கு சென்று குரு சீடர் முறையில் உபதேச வாயிலாகச் சுத்தாத்வைத சைவ சித்தாந்த நெறியைப் பரவச் செய்யுமாறு வேண்டுகிறோம்.

மேலே கண்டபடி மெய்கண்டார் கண்ட சைவ சித்தாந்த சமய நெறியை உபதேச முறையில் பரவச் செய்வதற்காகவே அவருடைய அவதாரத் தலமாகிய இந்தப் பெண்ணாகடத்திலே அவருடைய பெயரிலேயே ஓர் நிலையமும் அதன் பராமரிப்புக்கு வேண்டிய பொருளும் ஏற்படுத்தி வைக்க சைவ மடாதிபதிகள் யாவர்களையும் மிகவும் வணக்கத்துடன் வரவேற்புக் குழுவினரின் சார்பில் வேண்டிக்கொள்கிறேன். நிற்க, தமிழ்நாட்டில் சைவப் பற்றுடைய மற்ற அன்பர்கள் யாவர்களும் அதற்குத் தக்க உதவி செய்யும்படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் ஆரம்ப விழாவிலே தலைமை தாங்கியவரும், யாழ்ப்பாணத்தில் மிகச் சிறப்பாகச் சைவம் வளர்க்கும் முறையில் கல்லூரிகளை நடத்தியவரும், இலங்கையில் சிறந்த அரசியல் வாதியாக உரிமைப் போரைத்தொடங்கி நடத்தியவருவான சர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் மருகோனே! வருக! தஞ்சையில் ஒரு சிறந்த சமயாநுபவம் மிக்க ஞானியின் பேரனே! வருக! இலங்கை அரசியல் முன்னாள் அமைச்சர் பதவி வகித்தவரே! வருக! இலங்கை அரசில் இந்திய மக்களுக்குச் சலுகை காட்டி வந்த நடேசமணியே! வருக! இலங்கை அரசில் தமிழையும் ஓர் ஆட்சி மொழியாக ஆக்குவிக்கப் போராட்டம் செய்த வீரவள்ளலே வருக! சுத்தாத்வைத சைவ சித்தாந்த சமயம் தழைத்தோங்கிவர இப்பெண்ணு கடத்தில் அவதாரம் செய்த மெய்கண்டார் பரம்பரையில் வரும் சைவ மடாதிபதிகளுள் உபதேச தவமணிகளான திருவாவடுதுறை ஆதீனத்திற்குத் தக்க துணையான தவ மணியே வருக! சென்ற ஆண்டு பொன் விழாவில் தலைமை வகித்ததோடு நில்லாது இந்த ஐம்பத்தோருவது ஆண்டு விழாவிலும் தலைமை வகிக்கக் கோரின அவசர அழைப்புக்கும் ஆக்ஷேபணை இல்லாமல் ஒப்புக்கொண்ட அன்பரே வருக! வருகவே!

தமிழ்நாடதன்கண் உள்ள ஆலயங்களையும் மற்ற அற நிலையங்களையும் பரிபாலனம் செய்து வந்த உதவிக் கமிஷ்னர் உயர் சைவத்திரு வேளாளர் சண்முகசுந்தரம் பிள்ளைக்குத் தலைமையாய்த் தோன்றிய தையலே வருக! பி.ஏ., பி.எஸ்சி. (ஹானர்ஸ்) பட்டம் பெற்றுச் சென்னை இராஜ்யக் கல்லூரியில் விலங்கியல் துணைப்பேராசிரியரான பெண்மணியே வருக! தற்போது பெண்ணுகடம் என்கிற கடந்தை நகரில் நடக்கும் சைவ சித்தாந்த சமய மாதர் மாநாட்டுக்குத் தலைமைதாங்க வந்திருக்கும், ஆங்கிலம் கற்றதோடு அமையாது தமிழில் சித்தாந்த சாத்திரமும் செவ்வனே கற்ற கற்பகவள்ளி அம்மையாரே வருக! வருகவே!



தமிழ் நாட்டிலே திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகளின் திருமுன்பு 1905-ம் ஆண்டில் நமது சமாஜத்தைத்தோற்றி வைத்தவர்களில் ஒருவரான மறைமலை அடிகள் என்கிற சுவாமி வேதாசலம் அவர்களின் நேர்முகமான மாணவ மணியே வருக! உலகம் எங்கும் தமிழ் வளர்ந்து ஓங்கும்படி அகத்தியருக்கு முதல் முதலாக தமிழை உபதேசித்த முருகப் பெருமானுக்கு அடிமை பூண்டு, சென்னை முத்தியால்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் பணி ஆற்றிவரும் தமிழ் ஆசிரியரான முருகவேளே வருக! இரண்டாண்டிலே இளஞர் பருவத்திலே ஸ்ரீ பரஞ்சோதி முனிவரால் உபதேசம் செய்யப்பட்டு அந்த வழியிலேயே ஒழுகிச் சிந்தையில் நாடி அநுபூதியில் கண்டு உணர்ந்து மயர்வு அறத் தெளிந்து உலகத்தோருக்குச் சிவஞான போதத்தை உரைத்த இளஞர் மெய்கண்டார் தோன்றிய தலமாகிய இப்பெண்ணுகடத்தில் நடக்கும் சைவ இளஞர் மாநாட்டுக்குத் தலைமை வகிக்க வந்த தயாநிதியே வருக! வருக!

மெய்கண்டார் அவதாரம் செய்த தலமான திருப்பெண்ணுகடத்தில் சைவ சித்தாந்த சமாஜம் 51-வது ஆண்டு நிறைவு விழாவில் நடக்கும் சுத்தாத்வைத சைவ சமய சொற்பொழிவுகளைக் கேட்டு ஆனந்திக்க விஜயம் செய்திருக்கும் அன்பர் அனைவர்களும் வருக! வருகவே!!

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

# 51-ம் ஆண்டு அறிக்கை

(1–12–55 முதல் 30–11–56 வரை)

இச் சமாஜம் 7-7-1905-ல் திருப்பாதிரிப்புலியூர் உயர்திரு ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில் நிறுவி 11-12-1915-ல் பதிவுசெய்யப்பட்டது. சமாஜத்தின் நோக்கம் சைவ சமயத்தையும் அதன் தத்துவ சாத்திர முடிபுகளையும் பரவச் செய்தலேயாம். இக்கருத்து முற்றுப்பெற சமாஜம் கையாளும் முக்கிய முறைகள் வருமாறு :—1. ஆண்டு விழா நடத்தல். 2. கிளைச் சபைகளை அமைத்தல். 3. சைவ சித்தாந்தக் கொள்கைகளையும் அவற்றிற்கு ஆதரவு புரியும் ஏனைய கருத்துக்களையும் வெளியீடுகள் மூலமும் "சித்தாந்த"த் திங்கள் தாள் மூலமும் வெளியிடல். 4. திருமுறைகளை அடக்க விலைக்கும், இயன்றவரை மாணவர்கட்கு இலவசமாகவும் வழங்குதல். 5. புத்தகசாலை அமைத்தல். 6. பிற சபைகள் மூலம் சமய போதனை செய்தல். 7. மக்களுக்கு அறத்தின் நெறி, சமய இயல்பு விளக்குதல். 8. சைவ சமயம் புக விழைவார்க்குத் தக்க வசதிகள் ஏற்படுத்தல். 9. சமயம், கோயில், மடம், பிறவற்றைக் கால நிலைக்கு ஏற்றவாறு அவற்றின் உயரிய உண்மை நோக்கங்கள் நிறைவேற புதிய முறையில் சீர்திருத்தல். 10. 'கடவுள் ஒருவர் உண்டு' என்ற கொள்கையையும் அருள் ஒழுக்கத்தையும் பரப்புவதில் ஏனைய சமயங்களோடு ஒத்து உழைத்தல். 11. இன்றியமையாச் சாதனமான தமிழ் மொழியை வளர்த்தல். 12. சைவ சமய நூல்களில் தேர்வு நடத்தித் தேறியவர்களுக்குச் சைவப் புலவர், இளஞ் சைவப் புலவர் பட்டமளித்தல் முதலியன. நம் திங்கள் வெளியீடான "சித்தாந்தம்" 29 ஆண்டுகளாகச் சமாஜ உறுப்பினர்



களுக்கு வேறு கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றது. சமாஜ உறுப்பினர் ஆண்டுக் கட்டணம் உள்ளூர் ரூ. 3. வெளியூர் ரூ. 4. இவ்வாண்டுத் தொடக்கத்தில் சமாஜ உறுப்பினர் தொகை 534 ; ஆண்டு முடிவில் 577.

சமாஜ பலவகை உறுப்பினர்கள் விவரம்

| | ஆ. | இ. | போ. | சா. | ஆக. |
|---|---|---|---|---|---|
| இராமநாதபுரம் | 13 | | | 44 | 57 |
| கன்னியாகுமரி | | | | 5 | 5 |
| காசி | 1 | | | 1 | 2 |
| கோவை | 8 | | 2 | 33 | 43 |
| செங்கற்பட்டு | 3 | | 1 | 19 | 23 |
| சென்னை | 11 | 5 | 2 | 59 | 77 |
| சேலம் | 2 | | 1 | 19 | 22 |
| டில்லி | | | | 1 | 1 |
| தஞ்சை | 19 | 2 | | 29 | 50 |
| திருச்சி (புதுக்கோட்டை) | 5 | | 2 | 35 | 42 |
| தென்னார்க்காடு | 7 | | 4 | 60 | 71 |
| நீலகிரி | | | | 2 | 2 |
| நெல்லை | 3 | | | 21 | 24 |
| பெங்களூர் | | | | 3 | 3 |
| மதுரை | | | 1 | 16 | 17 |
| வடார்க்காடு | 1 | | 1 | 24 | 26 |
| இலங்கை | 13 | 4 | | 64 | 81 |
| மலேயா | 1 | | | 30 | 31 |
| மொத்தம் | 87 | 11 | 14 | 465 | 577 |

மாநாடுகள் :—30–12–55 முதல் மூன்று நாட்கள் சிதம்பரம் இளமையாக்கினார் கோயிலில் சமாஜப் பொன்விழாவின் சைவர் மாநாடு உயர்திருவாளர் - சு. நடேசப் பிள்ளை

---

குறிப்பு :—ஆ – ஆயுள் அங்கத்தவர்; இ – இனம் பிரதிகள்; போ – போஷகர்; சா – சாதாரண அங்கத்தினர்.

அவர்கள், பி. ஏ., பி. எல். (இலங்கை அரசினர் தபால், ஒலி பரப்பு மந்திரி) அவர்கள் தலைமையிலும், சைவ இளைஞர் மாநாடு உயர்திரு. வித்வான் - க. வெள்ளைவாரணனார் அவர்கள் தலைமையிலும், சைவ மங்கையர் மாநாடு உயர்திரு. அ. கு. காமாட்சியம்மையார் அவர்கள், எம்.ஏ. தலைமையிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. மிகச் செம்மையாகப் பொன்விழாவை நடத்தித்தந்த திருவாளர்கள் ஆடூர் எம். இரத்தினசபாபதி பிள்ளை அவர்கள், செ. இரத்தினசாமி செட்டியார் அவர்கள் ஆகிய இருவருக்கும் சமாஜம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

**உறுப்பினர் கூட்டங்கள்** :—இவ்வாண்டில் சமாஜச் செயற்குழுக் கூட்டம் ஆறும், உறுப்பினர் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றன.

**சைவத்தேர்வு** :—சமாஜம் நடத்தும் சைவப்புலவர் தேர்வுக்கு விண்ணப்பித்த ஒருவரான வித்வான்-திரு. கு. சுந்தரமூர்த்தி, (தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்) இரண்டாம் வகுப்பில் வெற்றி பெற்றார்.

**மயிலைகிழார் மணிவிழா**:—சமாஜம் 1921-ல் மிகக்குன்றி, பெயரளவில் நின்ற நிலையை மாற்றி, உயரிய நிலைக்குக் கொண்டுவர 22 ஆண்டுகள் தொடர்ந்து செயலாளராகத் தொண்டாற்றியும் திருமுறை அடக்கவிலைப் பதிப்புகள் வெளிவரச் செய்தவரும், சிவஞான போதம் மொழிபெயர்ப்பல்ல என்பதற்கு 120 காரணங்கள் காட்டியவரும், 1950-ல் காசியில் சைவ சித்தாந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தியவரும், சித்தாந்தப் பேராசிரியரும், திருநெறித் தொண்டருமான மயிலைகிழார் இளமுருகனாரது மணிவிழாவை சமாஜம் 25-3-56-ல் சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் திரு. கி. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி. தலைமையில் சிறப்பாகக் கொண்டாடிற்று. 'சித்தாந்த' பங்குனி இதழை மணிவிழா மலராக வெளியிட்டது. 7-3-56-ல் அவரது இல்லத்தில் நிகழ்ந்த விழாவில் சமாஜத்தினர், அவர் 'சிவம், தமிழ் போல் சிறந்து வாழ' வாழ்த்துப் பா வழங்கி, கலந்து சிறப்பித்தார்கள்.

(தொடரும்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

51-வது ஆண்டு நிறைவு விழாவின்

# சைவ இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை

## திருப்பெண்ணாகடம்

திரு. புலவர் - முருகவேள், பி. ஓ. எல். அவர்கள்

[30—12—1956]

"திருத்தன் ஆறங்கன் நீற்றன்
நான்மறையன் நீலமார் மிடற்றன் நெற்றிக்கண்
ஒருத்தன் மற்றெல்லா உயிர்கட்கும்
உயிராய் உளன்இலன் கேடிலி உமைகோன்,
திருத்தமாய் நாளும் ஆடும்நீர்ப்
பொய்கை சிறியவர் அறிவினின் மிக்க
விருத்தரை அடிவீழ்ந் திடம்புகும்
வீழி மிழலையான் எனவினை கெடுமே."—சம்பந்தர்

'சைவத் தமிழன்'எனும் தன்மதிப்பு நல்லுணர்ச்சி
மெய்வைத்த அன்பின்எனை மிக்கூட்டி—உய்வித்த
சான்றோர் மறைமலைபோல் தக்கோர்தம் தாள்தலைமேல்
ஏன்றுதொழு கேன்யான் இனிது.

### தோற்றுவாய்

சிவநெறிச் செந்தமிழ் இளைஞராய தோழர்களே!

சைவ சித்தாந்தச் சான்றோர் பெருந் தலைவராகிய ஆசிரியர் மெய்கண்டார் பெருமான் தோன்றியருளிய திருப்பெண்ணாகடம் என்னும் இச் சிவதலத்தில், சைவ சித்தாந்த

மகா சமாஜத்தின் 51-ஆம் ஆண்டு நிறைவு விழாவின் சார்பில், நாம் அனைவரும் இங்குக் கூடி மகிழ்கின்றோம். "நன்றியால் வாழ்வது உள்ளம்" என்பது திருஞான சம்பந்தர் திருமொழியாதலின், இச் சைவ இளைஞர் மாநாட்டின் தலைமைப் பொறுப்பினை எளியேற்கு அன்புடன் வழங்கிய சமாஜச் செயற்குழுவினர் அனைவருக்கும், என் பணிவார்ந்த நன்றியுணர்வைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

**சமாஜச் சிறப்பு:** நமது சைவ சித்தாந்த மகா சமாஜம், கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தமிழும் சைவமுந் தழைக்க, அரும்பெரும் பணிகள் ஆற்றி வந்துள்ளது. தென்றமிழ் நாட்டுச் சமய வரலாற்றில் இந்நூற்றாண்டில் நமது சமாஜம் செய்துள்ள தொண்டுகள் தனிப்பெருஞ் சிறப்பிடம் பெறுதற்குரியனவாகும். இந்நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங்கிய பேரறிஞர்கள் அனைவரும், சமாஜத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்களே. தமிழகத்தின் இணையற்ற ஒரு மாபெருஞ் சமயப் பொது நிறுவனம், நமது சமாஜமே யாகும். இதன் சீரும் சிறப்பும், தமிழும் சிவமும் வழங்கி வரும் அயல்நாடுகளிலும் பரவியுள்ளனவெனின், வேறு பிறிது கூறுவது யாதுளது? "ஞானம் உண்டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே" எனத் திருமூலர் அருளிச் செய்தபடி, 'நாட்டின்கண் நல்லறிவாராய்ச்சி நெறிமுறைகளைப் பரப்பி வளர்க்கும் ஞானப் பெருந்தொண்டினை நமது சமாஜம் நிரம்பச் செய்து வந்துள்ளது. திருமுறை நூல்களையும், மெய்கண்ட நூல்களையும், சங்க இலக்கியங்களையும், சீவக சிந்தாமணி, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், திருப்புகழ் ஆகிய நூல்களையும் திருத்தமுற ஆராய்ந்து வெளியிட்டிருப்பதொன்றே, சமாஜத்தின் பெருஞ் சிறப்பிற்குச் சான்றாதல் அமையும். திருவாசகத்திற்கு உரைவரைதல் தானும் உய்தியில்லாத ஒரு பெருங் குற்றமாகக் கருதப்பெற்று வந்த வியத்தகும் இழிநிலையை மாற்றி, அன்பும் ஆர்வமும் உடையோர் அனைவரும் சைவ சித்தாந்த நூல்களை அறியவும் ஆராயவும், உரிமையும் வசதிகளும் உண்டாக்கிக் கொடுத்த சமாஜத்தின் அருமை பெருமைகள், அறிஞர் அனைவரும் மனமார மகிழ்ந்து பாராட்டத் தகுவனவாம்.



**இளைஞர் பொறுப்பு:** ஒருநாட்டின் செல்வ வளங்களுளெல்லாம் தலைசிறந்த பெருஞ் செல்வ வளமாகத் திகழ்வது, அந்நாட்டின்கண் உள்ள அறிவறிந்த பண்புடைய இளைஞர் திரளேயாகும். இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்களாதலின், ஒருநாட்டின் சிறப்பும் செழிப்பும் இளைஞர்கள் திறத்திலேயே உள்ளன. எனவே, நம்து தமிழகத்தின் "சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும்" நம்மனைய இளைஞர்களின் பொறுப்புணர்ச்சி மிக்க அறிவார்ந்த செயல்களை ஒட்டியே அமையும். தமிழ்நாட்டின் பலதிறப் பெருமைகளுள், சமயமும் சமய நூல்களும் சமயச் சான்றோர்களும் திருக்கோயில்கள், திருமடங்கள் போன்ற சமய நிலையங்களும் சிறப்பிடம் பெறுவனவாகும். இவையிற்றை யெல்லாம் குறிக்கொண்டு போற்றி வளர்த்துப் பயன்கொள்ளுதல் நம்மோரனைய இளைஞர்களின் தலையாய கடமையாகும். இக்கடமைகளை நன்கினிது நிறைவேற்றுதற்குச் சமய நெறிகள் பற்றிய உண்மைகளை இளைஞர்களாகிய நாம் திறம்பட ஆராய்ந்து தெளிந்து கொள்ளுதல் வேண்டும்.

**புராண கதைகள்:** இன்று இளைஞர்களாகிய நம்மிடையே சமய அறிவும் ஒழுக்கமும் ஆர்வமும் குறைந்து, பெரிதும் குழப்பமுற்றுக் காணப்படுகின்றன. சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின்பால் உய்க்கும் அறிவு நெறிகளே சமயங்களாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலையை, நம்மனோர்க்கு எய்துவிக்க வல்ல வழிமுறைகளே சமயங்கள் எனப்படுகின்றன. சில புராண கதைகளைக் காட்டிச் சமயங்களைச் சிலர் எள்ளனம் செய்கின்றனர். நுண்ணிய சமயக் கருத்துக்களைப் பொதுமக்களுக்குப் பருவடிவில் எளிய முறையில் உணர்த்துதற் பொருட்டும், கவிதையழகுகள் குறித்துமே புராண கதைகள் ஏற்படலாயின. "அப்பணி செஞ்சடை ஆதி புராதனன், முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள், முப்புரமாவது மும்மல காரியம்" எனவரும் திருமூலர் திருமொழி இவ்வுண்மையைத் தெளிவுறுத்தும். திருவாசகத்தின் திருச்சாழல் என்னும் பகுதியும் புராண கதைகளின் நுண்பொருளை விளக்க எழுந்தது எனலாம். "தொழுவார்க்கே அருளுவது சிவ

பெருமான்", "மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற், கண்ணுதலான் பெருங் கருணை கைக்கொள்ளும்" என்னும் சமய உண்மைகளையே, திருஞான சம்பந்தர் பதிகங்கள் தோறும் சில கதைகளாற் குறிப்பிடுவதாகச் சேக்கிழார் பெருமான் அறிவுறுத்தி இருத்தல் கருதற்பாலது. புராண கதைகளை நம்பாமலும் ஒருவர் சமய உணர்வினராக இருத்தல் இயலும். "எந்நிலையில் நின்றாலும், எக்கோலங் கொண்டாலும், மன்னிய சீர்ச்சங்கரன் தாள் மறவாமை பொருள்!"

**அறிவியல்:** சமயக்கோட்பாடுகட்கும் அறிவியலுண்மைகளுக்கும் ஏதோ பெரிதும் முரண்பாடு இருப்பதுபோலச் சிலர் பேசி வருகின்றனர். தாமஸ் ஹக்ஸ்லி குறிப்பிட்டுள்ளபடி, "அறிவியல் என்பது பயிற்சி பெற்று ஒழுங்குபடுத்தப்பட்ட பொது அறிவுக்கலையே." ஆதலின் பிரான்ஸிஸ் பேக்கன் கூறுதற்கேற்ப, அரைகுறை அறிவியலே சமயத்தை இகழும். எங்கு அறிவியற்கலை தடுமாறுகின்றதோ, அங்கிருந்துதான் சமயம் தொடங்குகின்றது. "அறிவியல் இல்லாத சமயம் குருட்டியல்புடையது; சமயம் இல்லாத அறிவியல் முடத்தன்மை வாய்ந்தது" எனத் தலைசிறந்த அறிவியற் பேரறிஞரான ஐன்ஸ்டைன் பொருள் பொதுளக் கூறியிருப்பது, இளைஞர்களாகிய நாம் கருத்தில் இருத்துதற்குரியது. சமயமும் அறிவியலும் ஒன்றையொன்று தழுவி நிறைவுறுவன. இரண்டும் மக்களின் வாழ்க்கைக்குப் பெரிதும் இன்றியமையாதனவேயாம். "நாம் மிகப் பல அறிவியல் அறிஞர்களையும், ஆனால் ஒருசில சமயச் சான்றோர்களையுமே பெற்றிருக்கின்றோம். அணுவின் மறைபொருள்களை அறிந்துகொண்டுவிட்ட நாம், 'மலைச்சொற்பொழி'வினைப் புறக்கணித்து விட்டோம். இன்றைய உலகில் அணுவரக்கன் ஓங்கி வளர்ந்துவிட்டான்; அறவுணர்வோ குழந்தைமை நிலையிலேயே குறுகிக் கிடக்கின்றது. அமைதியைவிடப் போரைப் பற்றியும், வாழ்வதைவிடக் கொல்லுவதைப் பற்றியுமே நாம் மிகுதியாகத் தெரிந்திருக்கின்றோம்" என அறிஞர்கள் பலரும் வருத்தம் தோன்றப் பேசி வருதல், மனித வாழ்விற்குச் சமய உணர்வின் இன்றியமையாமையைப் புலப்படுத்தும். அன்றியும், அண்மையில் வளர்ச்சி பெற்றுள்ள மேலைநாட்டு அறிவியல் முடிபுகள் பலவும், நமது சைவ சித்தாந்தத்திற்



குரிய அடிப்படையுண்மைக் கொள்கைகள் எல்லாவற்றின் உண்மையையும் உயர்வையும் மெய்ப்பித்து நிறுவுவதற்கு மிகவும் துணைநின்று அரண் செய்கின்றன எனப் பேரறிஞர்கள் ஆராய்ந்து கூறுவது, நாம் அனைவரும் பெருமிதங் கொள்ளுதற்குரிய செய்தியாகும்.*

**சீர்திருத்தம்:** சீர்திருத்தக்காரர்கள் எனத் தம்மைச் சொல்லிக்கொள்ளும் நண்பர்கள் சிலர் சமயத்தைப் புறக்கணித்து விடுகின்றனர். "தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா! இன்று தோன்றியன எனும் எவையும் தீதாகா" எனக் கட்டுரைத்த சைவச் சான்றோர் ஒரு சீர்திருத்தக்காரரே அல்லரோ? சமயாசிரியர்கள் தம்மீது பல குற்றங்களை ஏறட்டுக்கொண்டு பாடியிருத்தல், அவ்வாற்றால் உலக மக்களைச் சீர்திருத்துதற்கேயாம். தாவீது முதலியவர்களின் துதிப்பகுதிகளில் வரும் 'நான்' 'என்னை' என்பன போன்ற சுட்டுக்கள், அத்தனி மனிதர்களைக் குறியாமல் இஸ்ரேல்நாட்டு மக்கள் அனைவரையுமே சேர்த்துச் சுட்டுவதாக, பேராசிரியர் ஹட்சன் எழுதுவதும் ஈண்டைக்கு உன்னத்தகும். உலகில் அவ்வப்போது தோன்றிய சமயத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒரு சீர்திருத்தக்காரரே யாவர். சீர்திருத்த இயக்க இளைஞர்களுக்குச் சிவநெறியானது சிறிதும் முரண்படுவதன்று.

1929இல் திருப்பாதிரிப்புலியூரில் நிகழ்ந்த மாபெருஞ் சைவர் மாநாட்டுத் தீர்மானங்களைக் கண்டால், சீர்திருத்த நோக்கம் என்பது எவருடைய தனியுரிமையும் அன்மை இனிது விளங்கும். சமயத்துறையில் மூடப் பழக்கவழக்கங்களும் குருட்டு நம்பிக்கைகளும் இருப்பனவாகத் தோன்றினால், அவற்றை நன்கினிது ஆராய்ந்து பார்த்து, அறிவாலும் அன்பாலும் களைய முயன்று, உண்மைச் சமயநெறியின் உயரிய கருத்துக்களை அறவொழுக்க அடிப்படையிற் பரப்பி, மக்களுக்கு நலம் விளைவிப்பதே சீரிய சீர்திருத்தச்

---

*"The recent developments of Western Philosophy and Physical science, go every inch to prove the truth and value of all the fundamental doctrines that are peculiar only to Saiva Siddhantha and not to any other religion or philosophy, ancient or modern."

—பேராசிரியர் மறைமலை அடிகள்

செந்நெறியாகும்.' திருமுறைப் பாடல்கள் பலப்பல இக்கருத்தைச் செவ்விதின் வலியுறுத்தும்.

**அரசியல்:** இனி, அரசியற்றுறையில் ஈடுபட்டு உயர விரும்பும் நண்பர்கள் சிலர், சமய உணர்வால் தமது அரசியல் முன்னேற்றம் தடைப்படுமோ என அஞ்சுகின்றார்கள். சமய உணர்வில் தலைசிறந்திருந்த இராசராசன் இராசேந்திரன் முதலிய சோழ வேந்தர்கள், தமது அரசாட்சியின் பொறுப்புக்களைத் திறம்பட நடாத்தியுள்ளமையின், உண்மைச் சமயவுணர்வு அரசியல் ஆள்வினைத் திறத்திற்கு ஊறு பயப்பதன்று எனத் தெளியலாம். நம் கண் முன்னரே காந்தியடிகளும், தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களும், சமய உணர்வுடையவர்களாக இருந்தே அரசியலிற் பெருந் தலைவர்களாக விளங்கி, அரும்பெருஞ் செயல்கள் ஆற்றியுள்ளனர். "கங்கைகொண்ட சோளேச்சரத்தானை அங்கையோடேந்திப் பலிதிரி கருவூர் அறைந்த சொன் மாலையால் ஆழிச் செங்கையோடுலகில் அரசுவீற்றிருந்து திளைப்பதும் சிவனருட் கடலே" என வரும் திருவிசைப்பா, சமய உணர்வால் இராசேந்திர (கங்கை கொண்ட) சோழனின் அரசு வீற்றிருக்கை சிறப்பெய்தியதனையே வலியுறுத்துவதாகும்.

**உலகியல்:** "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" எனச் சமயங்கள் அறிவுறுத்துதலின், உலக நலங்களைத் துய்க்க விரும்புவோர்க்கு அவை கேடு சூழ்வனவாகும் எனக் கருதுபவர்களும் சிலர் உளர். "அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டே" எனப் போதரும் திருவிசைப்பா, இம்மையின்ப நுகர்ச்சிக்குச் சமயங்கள் தடையல்ல என்றுணர்த்துவதாகும். தொல்காப்பியர் கூறிய காஞ்சித் திணையினையே, "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" எனச் சமயாசிரியர்கள் கூறினர். உலக நிலையாமையினை உணர்ந்த ஒருவனே, உலகியலின்பங்களை நெறியறிந்து நுகர வல்லவனாவான். கோவலனும் கண்ணகியும் "தொலையாத இன்பமெலாம் துன்னினார் மண்மேல் நிலையாமை கண்டவர்போல் நின்று" எனச் சிலப்பதிகாரம் கூறுதல் காணலாம். "வாழ்வாவது மாயம்" எனக் குறிப்பிட்ட சுந்தரமூர்த்திகளின் வரலாறே, உலகியலின்பங்களை நெறியறிந்து துய்க்கும் முறையினை உணர்த்துவதாகும்.



**சமரசம்:** மக்களிடையே வேற்றுமைகட்கும் பூசல்கட்கும் காரணம் மதங்களே என்பர் சிலர். வேற்றுமைகட்கும் பூசல்கட்கும் மதங்கள் காரணம் அல்ல, அவற்றை நன்குணர்ந்து கொண்டு கடைப்பிடியாத மக்களேயாவர் என்பதுணரற்பாற்று. சமய உண்மைகளை நன்குணர்ந்து தெளிந்த சான்றோர்களும், அவைகளைப் பற்றி ஒன்றுமே அறியாத எளிய நல்ல பொதுமக்களும் ஒருபொழுதும் மதப் பூசல்களை விளைப்பதில்லை. இடைநிலை மக்களே அரசியல் பொருளியல் இனவியற் காரணங்களை ஒட்டி மதத்தின் பேரால் பூசல்களை விளைவித்து வந்துள்ளனர். ஆதல் பற்றியே "போதம் மிகுத்தோர் தொகுத்த பேதைமைக்கே பொருந்தினோர் இவர்க்கன்றிக் கழிப்பாற் செல்ல ஏதுநெறி எனுமவர்கட்கு"த் தாம் சிவஞான சித்தியாரைத் தேர்ந்துரைப்பதாக ஆசிரியர் அருணந்தி சிவனார் அறிவிக்கின்றார். "உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற் புணராமை கேளாம் புறன்" என மெய்கண்டார் கூறுவதும் கருதற்பாலது. மேலும், மதங்கள் மட்டுமேயன்றி நாடு மொழி இனம் முதலியனவும் வேற்றுமைகட்குக் காரணம் என்பதனையும், தவிர்க்க முடியாத இவ்வேற்றுமைகளிடையே இயன்ற அளவு ஒற்றுமை கண்டு வாழ முயலுவதே நம் கடமை என்பதனையும் நம்மனோர் மனங்கொள்ளுதல் வேண்டும். ஒருசிலர் "எம்மதமும் சம்மதம்" எனக் கூறிக்கொண்டு ஒன்றன்பாலும் ஈடுபாடின்றிக் காலங் கழிக்கின்றனர். வேறு சிலர் "சமரசம்" என்னும் பெயரால் "கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப் பதக்கென்று ஒருங்கொப்பக் கொண்டானாம் ஊரன்" என்பதுபோல, எல்லாவற்றையும் கூட்டிக் கலந்து குழப்பிப் பெரியதோர் ஏதம் விளைவிக்கின்றார். எல்லாச் சமயங்களையும் விருப்பு வெறுப்பின்றி அதனதன் நோக்கநிலையினின்று பொதுவாக ஆராய்ந்தறிந்து தேர்ந்து உண்மை கண்டுவப்பதும், அவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தமக்கெனச் சிறப்பு முறையிற் கொண்டு மனமார ஈடுபட்டுப் பின்பற்றி ஒழுகி வருவதுமே, உண்மைச் சமரச நெறியாகும். இப்பொதுமை நெறிச் சமய நல்லுணர்விற்கு இணையற்ற எடுத்துக்காட்டாக இளங்கோவடிகளை நாம் பின்பற்றி ஒழுகி, மதப் பூசல்களைப் போக்கி உலகநலன் குறித்து உழைத்தல் வேண்டும்.

சமயத்தின் முதன்மை: நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் எத்துணை இன்றியமையாதனவோ, அத்துணையள வுக்குச் சமயப் பற்றும் இன்றியமையாததேயாகும். மொழி யானது மக்களின் எண்ணமும் அதன் வெளிப்பாட்டு முறைகளுமாக, உண்மைச் சமயமோ மக்கள் வாழ்க்கைத் துறைகள் அனைத்திலும் ஊடுருவிநிற்கும் தகைமை வாய்ந்து திகழ்வது. ஒரு நாட்டின் நாகரிகமும் பண்பாடும் பிறவு மெல்லாம், சிறப்பாக அதன் சமய நெறியாலும் உருப் பெற்றுச் சுடர்விடுகின்றன. சமயம் என்பது சிலர் நினைப் பதுபோல, எளிதிற் புறக்கணித்துவிடத் தகுவதொன் றன்று. "சமயம் என்னும் புனிதம் மிக்க இனிய தெய் விகச் சொல்லில், மிக மேலான மதிப்பையுடையதும், இவ் வுலகிலுள்ள பொருள்களையெல்லாம் கொடுத்தேனும் பெறத் தகுந்ததுமாய்ச், சொல்லுதற்கரிய எத்துணையோ பல அரும்பெறற் பொருட்களஞ்சியம் அமைந்துள்ளது."* நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், சமய உணர்வு நம்மிடம் இயல்பாக அமைந்து கிடக்கின்றது. குறித்த ஒரு பருவத்தில் "பாலுணர்ச்சி" ஏற்படுவது போலவே, கடவு ளுணர்ச்சியும் சமய வொழுக்கமும் என்றேனும் ஒருநாள் ஒவ்வொருவர்க்கும் ஏற்படும் நிலை வந்தே தீரும்.

"கன்னிகை ஒருத்தி சிற்றின்பம் வேம்பென்னினும்,
கைக்கொள்வள் பக்குவத்தில்;
கணவனருள் பெறின்,முனே சொன்னவா றென்னெனக்,
கருதி நகையாவள்!"

எனவரும் தாயுமானவர் பாடலும் இவ்வுண்மையை நன்கு விளக்குதல் காணலாம். "நானேதும் அறியாமே என்னுள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டாநின்றாய்!" "புத்தி

---

*Religion! what a treasure untold,
Resides in that heavenly word;
More precious than silver and gold
Or all that this world can afford!

—*William Cowper*



வட்டத்திடைப் புக்கு நின்றானையும் பொய் என்பனோ?" "உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்தறிதி என்று, வெள்கினேன் வெள்கி நாணும் [illegible] சிரித்திட் டேனே" "ஏழையேன் [illegible] இகழ்ந்தவாறே" "போற்றுதே ஆற்றநாள் [illegible] போக்கினேனே" என்று திருநாவுக்கரசர் ஆங்காங்குக் குறிப்பிட்டிருத்தல் நம் சிந்தனைக்குரியது.

கடவுளுணர்ச்சி: நம் தமிழ்ப் பெருமக்கள் தொன்று தொட்டே கடவுளுணர்ச்சியில் [illegible] திருக்கின்றனர். தொல்காப்பியர் [illegible] உயிர், மெய் எனப் பாகுபாடு செய்திருப்பதொன்றே, பழந்தமிழர் களின் சமய மெய்யுணர்வைப் புலப்படுத்தும். திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர் அவர்கள் இயற்றிய "தமிழ் நெடுங் கணக்கின் மெய்ப்பொருட் கூறுகள்" (Mystic Aspects of the Tamil Alphabets) என்னும் நூலும் இக்கருத்தை வலி யுறுத்தும். "வினை எனப் படுவது வேற்றுமை கொள்ளாது நினையுங்காலைக் காலமொடு தோன்றும்" என்னும் நூற்பா விற்கு அந்நூல் விளக்கியுள்ள பொருளைக் "கரந்தைக் கவி யரசு" அவர்கள் பலகாலும் பாராட்டியுரைப்பது வழக்கம். தமிழ் நூல்களுள் நமக்குக் கிடைத்திருப்பனவற்றுள் முதன் முதலாகத் தெய்வங் கொள்கையையும் வழிபாட்டினையும் வற்புறுத்திய புலவர் திருவள்ளுவரே. ஆதல் பற்றியே அவர் "தெய்வப் புலவர்" எனச் சிறப்பிக்கப்பட்டார். எவரும் மறுக்கொணாது உடன்படும் வகையில், நடுநிலை பிறழாமல், கடவுளியல்பினைத் திட்ப நுட்பமுறத் தெளிவித் துக் கூறியிருக்கும் திறமொன்றே, அதனைச் செய்தருளிய வர் திருவள்ளுவரே என்பது தெருட்டாநிற்கும். இங் ஙனமே, சங்ககால இலக்கியங்கள் பலவற்றினும் கடவுட் கோட்பாடுகள் நிரம்ப வந்திருத்தல் யாவரும் அறிந்தது. "ஊழ்வினை உருத்துவந் தூட்டும்" எனவும், "தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்" எனவும் இளங்கோ வடிகள் முழங்குகின்றார்!

மாணிக்கவாசகர், போற்றித் திருவகவலின்கண், தாயி னது வயிற்றிற் பத்துத் திங்கள்காறும் கருவான்து முறை முறையே இறைவனருட்டுணை கொண்டு வளர்ந்துவரும்

பெற்றியினை விரித்துரைத்து, நம்மிடையே கடவுளுணர்வை எழுப்புகின்றார். "விறகிற் றீயினன் பாலிற் படும் நெய் போல் மறைய நின்றுள்ளன் மாமணிச் சோதியான்" எனத் திருநாவுக்கரசர் தெளிவிக்கின்றார். திருஞானசம்பந்தர், "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா! சுடர்விட்டுளன் எங்கள் சோதி!" என்கின்றார். ஆயினும், ஆசிரியர் மெய்கண்டார் நம் பொருட்டு மிகவும் இரக்கங் கொண்டு, ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதித்துக் காட்டியும், பலவகையாற் கடவுளுண்மையை நமக்கு உணர்த்த முற்படுகின்றார்: எல்லாப் பொருள்களையும் காணும் கண் தன்னைக் காணாது; தனக்கு அப்பொருள்களைக் காட்டி நிற்கும் உயிரையும் அது காண இயலாது. அதுபோலவே, உலகியற் பொருள்களை அறிந்து வருகின்ற உயிர் தன்னை அறியாது; தனக்கு அவற்றை அறிவித்தருளும் இறைவனையும் அறியாது. ஆயினும், கண்ணுக்கு மறைந்து நின்று பொருள்களைக் காட்டி வருகின்ற உயிர் ஒன்றுண்டென்பது துணியப்படுதல்போல, உயிர்களுக்கு மறைந்து நின்று உலகியற் பொருள்களை உணர்வித்துவரும் இறைவன் ஒருவன் உளன் என்பதும் துணியப்படும். உயிர்களின் உள்ளத்தே மறைந்து நின்று பொருள்களை உணர்த்தி வரும் அவ்விறைவனை, அவ்வுள்ளத்திலேயே ஆராய்ந்து தெளிக! என்னும் கருத்து அமைய,

"காட்டிய கண்ணே தனைக்காணா! கண்ணுக்குக்
காட்டாய உள்ளத்தைக் கண்காணா!—காட்டிய
உள்ளம் தனைக்காணா! உள்ளத்தின் கண்ணாய
கள்வன்தான் உள்ளத்திற் காண்!"

என அவர் விளக்கியிருப்பது, அறிஞர்க்கு ஆராப் பெருவிருந்தாகும். அவர் தம்மைப் பின்பற்றி, "ஒருவனோடொருத்தி ஒன்றென்றுரைத்திடும் உலகமெல்லாம் வருவதும், வந்து நின்று போவதும் ஆதலாலே தருபவன் ஒருவன் வேண்டும்! என அருள்நந்திசிவமும் இறையுண்மை நிறுவுகின்றார். "இயல்புகாண் தோற்றி மாய்கை" என்பாரை மறுத்து, "இயல்பினுக்குச் செயலதின்று; செய்தியேல் இயல்பதின்றாம்; செயல் செய்வான் ஒருவன் வேண்டும்!



செயற்படும் சேதனத்தால்!" எனவும் அவர் வற்புறுத்துகின்றார். தாயுமானவர் "தாயர் கர்ப்பத்தூடு அனமும் தண்ணீரும் தந்தருளும் நேய! உனை யாரே நினையார்? பராபரமே!" "தோற்பாவை நாலாட் சுமையாகும், சீவன் ஒன்றிங்கு ஆர்ப்பால் எடுத்த தெவராலே? பராபரமே!" எனவும், இராமலிங்கர் "நில்லாத காற்றை நிலையாக் கடத்தடைத்துச் செல்லாது வைக்கின்ற சித்தனெவன்?" எனவும் வியந்து வினவித் தெய்வம் தெளிவிக்கின்றனர்! "ஈசனுக்கு அன்பில்லார், அடியவர்க்கன்பில்லார்; எவ்வுயிர்க்கும் அன்பில்லார்; தமக்கும் அன்பில்லார்!"

"கடற்காட்சி! வான்காட்சி! கார்வரைசூழ் காட்சி!
உடற்காட்சி! அவ்வுடல் ஒண்கூற்—படற்காட்சி!
உய்த்துய்த் துணர்ந்தக்கண், ஓர்இறைவன் உண்டு! என்னும்
மெய்த்தன்மை நெஞ்சின் மிகும்!"

**சிவ வழிபாடு:** கடவுட் பெரும்பொருளைத் தமிழர்கள் "சிவம்" என்னும் பெயராற் சிறப்புறக் குறிப்பிட்டுத் தொன்றுதொட்டு வழிபட்டு வருகின்றனர். எந்நாட்டிற்கும் உரிய இறைவனைத் "தென்னாடுடைய சிவன்" எனத் திருவாசகம் சிறந்தெடுத்தோதுகின்றது! "சிவன்" என்னும் சொல் 'முற்றுணர்வினன்' 'பேரின்ப காரணன்' 'தூய தன்மையன்' எனப் பொருள்படுதலை, ஆசிரியர் சிவஞான முனிவர் "மன்னுசிவன் சந்நிதியில்" என்னும் சிவஞான போத வெண்பாவில் விளக்குகின்றார். தொல்காப்பியம் கூறும் 'கந்தழி' என்பது சிவலிங்கமே என்றும், திருவள்ளுவர் குறித்த 'செம்பொருள்' என்பது சிவமேயாம் என்றும் பேரறிஞர்கள் கருதுகின்றனர். உலகிலுள்ள எல்லாச் சமயங்களையும்விட மிக மிகத் தொன்மை வாய்ந்ததும், உயிர்ப்புடையதுமாய் விளங்குவது (The most ancient living faith in the world) சைவ சமயமே என்று சர் ஜான் மார்ஷல் ஆராய்ந்துணர்த்துகின்றார். எகிப்து, சிரியா, பாரசீகம், சிறிய ஆசியா, கிரீசு, இத்தாலி, ஆப்ரிக்கா, அமெரிக்கா முதலிய உலகின் பல பகுதிகளிலும் சிவலிங்க வழிபாடு பண்டே பரவி இருந்ததாக வெஸ்ட்

ரோப்பே, கிராண்ட், ஆலென், டேய்லர் முதலிய அறிஞர்கள்
உண்மை கண்டு ஒளியாதுரைத்துள்ளனர்.*

சைவ சமயம் தமிழர் சமயம்; பழந்தமிழ்க் கொள்
கையே சைவ சமயம். அஃது எந்தச் சமயத்திற்கும் கொள்
கைக்கும் முரண்படுவதன்று. " ஓது சமயங்கள் பொருள்
உணரும் நூல்கள் " என்னும் சிவஞான சித்தியார் செய்யுள்
கூறுவதுபோல, பிற எல்லாச் சமயங்களையும் கொள்கை
களையும் தன்பாற் படிமுறையே தழுவிக் கொண்டு மகிழும்
பரந்த பெருநோக்குடையது சைவ சமயம். " அப்பாலும்
அடிச் சார்ந்தார் " பற்றிய சேக்கிழார் பெருமானது விளக்
கம், சைவ சமயத்தின் விரிந்த மனப்பான்மையைத் தெற்
றெனக் காட்டும். மானியர் வில்லியம்ஸ் என்பார் ' இந்து
மதம் ' என்பது குறித்துக் கூறியிருப்பன, இவ்வாற்றால்
சைவ சமயத்திற்கும் சிறப்பாகப் பொருந்தும். பலவேறு
மனநிலைகளைக் கொண்ட மக்களுக்கும் பயன்படும் வகையிற்
பலப்பல சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்
கின்றது சைவ சமயம் எனலாம்.†

---

*" The practice of 'Linga Worship' was so general as to have spread itself over a large part of the habitable globe, for it flourished for many ages in Egypt and Syria, Persia, Asia Minor, Greece and Italy; it still is in vigour in India and many parts of Africa and was even found in America on its discovery by the Spaniards, being regarded as the most sacred object of worship and consecrated by religion. The culture was associated with the very idea and sentiment which was regarded as ennobling to man."

*—Westroppe*

†It is all-tolerant, all-compliant, all-comprehensive, all-absorbing. It has its spiritual and its material aspect, its esoteric, and exoteric, its subjective and objective, its rational and mystical. It has one side for the practical, another for the severely moral, another



திருமுறைகள் : திருநாவுக்கரசர் " சொல்லும் பொரு
ளெலாம் ஆனார் தாமே, தோத்திரமும் சாத்திரமும் ஆனார்
தாமே " எனப் பாடுதற்கேற்பப் புகழ்நூல்களாய பன்னிரு
திருமுறைகளையும், பொருள் நூல்களாய பதினான்கு மெய்
கண்ட சாத்திரங்களையும், சைவ சமயம் தனக்குரிய சிறந்த
இலக்கியச் செல்வங்களாகப் பெற்றுப் பிறங்குவது தமிழர்
தம் தவப் பேறேயாகும். திருவாசகம், திருச்சிற்றம்பலக்
கோவையார், திருமந்திரம், பெரிய புராணம் போன்ற முழு
மணிகள் எனத் தகுந்த சிறந்த பெருநூல்களை நாம் வேறு
எம்மொழியினும் காண்டல் அரிது. இலக்கியச் சிறப்பு,
இசைநலம், கலைவளம், கற்பனைத்திறம், வரலாற்றுண்மை,
இயற்கைப் புனைவு முதலிய பற்பல துறைகளிலும்
ஒருங்கே சிறப்போங்கித் திகழும் திருமுறைகளை, உயிர்க்கு
உரம் விளைக்கும் " பல்வகைச் சத்துணவு மாத்திரைகள் "
(Multi-Vitamin Tablets) எனவே சுருங்கக் கூறுதல்
இயலும். இரவீந்திரநாத தாகூர் தென்னாட்டுச் சுற்றுப்
பயணம் செய்தபோது, "மாசில் வீணையும் மாலைமதியமும்"
முதலிய திருமுறைப் பாடல்களின் பொருளைத் தாம் விளக்
கிக் கூற மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருந்து, தமிழ்க்
கவிதைகளின் இணையற்றுயர்ந்த இறையருள் எழில்நலங்
களைப் பாராட்டிப் புகழ்ந்ததாகத் திரு. வி. க. அவர்கள்
சென்னையில் ஒரு சொற்பொழிவிற் குறிப்பிட்டார். நாவலர்
ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், மாணவர் ஒருவர்
" அம்மையே அப்பா " என்னும் திருவாசகப் பாடலைக்
கடவுள் வாழ்த்தாகப் பாட நேர்ந்து, இசை வயப்பட்டு
" என் அம்மையே அப்பா " எனவும் "இம்மையே யானுன்
னைச் சிக்கெனப் பிடித்தேன் " எனவும் பாடியபோது,
" யான் எனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும் " என்னும் உண்மையை யுணர்ந்து,
அவற்றை ஒழித்துக் கொள்ளுதற்காக அரும்பாடு பட்
டுயர்ந்த ஒரு சிறந்த சான்றோரின் திருப்பாடலில், நீர் மிக

---

for the devotional and imaginative, another for the sensuous and sensual, and another for philosophical and speculative......"

*—Monier Williams*

எளிதாக "யான் - என்" என்னும் சொற்களைச் சேர்த்துப் பாடிவிட்டீரே! என அவரைத் திருத்துதற்குக் கூறிய அருளுரைகள், அவற்றை அருகிருந்து கேட்ட என் உள்ளத்திற் பசுமரத்தாணிபோலப் பதிந்துள்ளன. அங்ஙனமே, அருட்டிரு மறைமலை அடிகளார் "யானே பொய் என் நெஞ்சும் பொய்" முதலிய திருவாசகப் பாடல்களை அவைகளிற் சொற்பொழிவிற் கூற நேருங்கால், விம்மி விம்மிக் கண்ணீர் மல்க நின்ற காட்சியை யான் பலகாற் கண்டு வியந்துருகி யுள்ளேன். "ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு ஞானத்தாய் உனைநானும் தொழுவனே" என்ற நிலையிலன்றோ நாமும் இருக்கின்றோம்? இன்னோரன்ன செய்திகளெல்லாம் நமக்குத் திருமுறைகளின் பலதிறப் பெருமைகளை உணர்த்தவல்லனவாம்.

**சைவ சித்தாந்தம்:** இவ்வாறே சைவ சித்தாந்த நூல்களும் தனிப்பெரு மாண்புகள் உடையனவாய் இலங்குகின்றன. சைவ சித்தாந்தம் தமிழர்க்கே யுரிய தனிப்பெருங் கடவுட் கொள்கை. டாக்டர் ஜி. யூ. போப், ரோலண்ட் கௌடி முதலிய பற்பலர் அவற்றின் அருமை பெருமைகளை வியந்து புகழ்ந்துள்ளனர். சைவ சித்தாந்தமானது இஞ்ஞான்றை அறிவியற் கலையாற் பெரிதும் அரண் செய்யப் பெறுவது! தன்னாற் கூறப்படும் பொருளும், அதன்கண் நிகழும் ஐயப்பாடும், அதற்குப் பிறர் கூறும் கருத்தும், அதனை மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபும், இயைபும் என்னும் இவற்றினை நிலைக்களமாகக்கொண்டு, தருக்கநெறி முறைகள் பிறழாது, எத்தகைய ஐயங்களையும் போக்கித் தெளிவு செய்யவல்லது! முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றித்தாய்ப் பிறங்குவது! உலகியல் நடைமுறை வாழ்க்கையிற் பிறழாது பெரிதும் இயைந்து சென்று சிறந்தொளிர்வது! அறிவாராய்ச்சிக் கலைக் களஞ்சியமாய்ப் பெருவிருந்தாய் விளங்குவது! பண்டைத் தண்டமிழ்ச் சான்றோர் பலரும் வாழ்ந்து காட்டிப் போற்றிப் போந்த செந்நெறியாய் நின்றிலங்குவது! "தெய்விகத் தத்துவக் கொள்கையானது, அறிவிலிகள் நினைப்பதுபோல, அத்துணைக் கடினமானதும் சுவையற்றதும் அன்று! அப்போலோவின் குழலிசைபோல, அஃது இனிமை மிக்க இசைநலம்



உடையதாகத் திகழ்கின்றது! தேனிற்றோய்த்த இனிய சுவைப் பொருள்களைப்போல, எஞ்ஞான்றும் மிக இனிமை பயக்கும் பெருவிருந்தாக அது விளங்குகின்றது. அதன்கண் சுவைக்குறைவோ தெவிட்டுதலோ சிறிதும் இல்லை" என *ஜான் மில்டன் பாடுவது போலவே, சைவ சித்தாந்தமும் தெளிவும் இனிமையும் செறிந்தொளிர்கின்றது என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை!

### முடிவுரை

**சைவத் தமிழ் நலஞ்சான்ற அருமை நண்பர்களே!**

இதுகாறும் கூறியவற்றை எல்லாம் உள்ளத்தே கொண்டு, நமது முன்னுள்ள அரிய பெரிய பொறுப்புக்களையெல்லாம் நாம் நன்குணர்ந்து கொள்வோமாக! பிற சமய மக்கள்போல, நம் சமயத்தினை நாம் பிற நாடுகளிலும் பரப்புதற்குத் துணியாவிட்டாலும், நம் சமய உண்மைகளை நம் நாட்டளவிலாதல் என்றும் ஒளி குன்றாது நிலைபெறச் செய்ய உறுதி கொள்வோமாக! "கடன் என்ப நல்லவை எல்லாம்" என்பதுணர்ந்து, நாட்டிற்கும் மொழிக்கும் சமயத்திற்கும் மக்கள் நலனுக்குமெல்லாம் தொண்டு செய்தற்குரிய வகைகளில், நம்மைப் பல துறைகளிலும் தகுதியும் திறமையும் உடையவர்களாக ஆக்கிக்கொள்ள நாம் மிகவும் முனைந்து முயலுவோமாக! சைவ இளைஞர்களுள் தலையாயவர்களாக நம்மாற் கொள்ளத் தக்கவர்கள், திருஞானசம்பந்தரும் மெய்கண்டாருமே ஆவார்கள். அந்தச் "சிறிய பெருந்தகையார்"களால், மன்பதைக்கு விளைந்துள்ள

---

*" How charming is divine philosophy !
Not harsh and crabbed, as dull fools suppose ;
But musical as is Apollo's lute
And a perpetual feast of nectar'd sweets
Where no crude surfeit reigns."

—*John Milton*

நலங்களுக்கு அளவேயில்லை. அப்பெருமக்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஒழுகி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து நாம் சிறப்புறுவோமாக! செந்தமிழ் வெல்க! சிவநெறி செழிக்க! வையகமும் துயர்தீர்க!

சைவ சமயம் பழஞ்சமயம்! தமிழர் சமயம்! பெருஞ்சமயம்!
மெய்யிற் சிறந்த விழுச்சமயம்! விரிந்த நோக்கின் வியன்சமயம்
பொய்யில் கேள்விச் சான்றோர்கள் போற்றி வளர்த்த புகழ்ச்சமயம்!
வையம் முழுதும் இதுபரவி, மக்கள் நலமே மிகவாழ்க!

செந்தமிழைக் கற்போம்! சிவத்தைத் தொழுதுய்வோம்!
அந்தமிலாப் பல்கலைகள் ஆய்ந்துணர்வோம்!—சந்தமுயர்
நாட்டிற்கும், மக்கள் நலனுக்கும் நன்குழைப்போம்!
மாட்சிமையின் வாழ்வோம் மகிழ்ந்து!

—முருகவேள்


## திருவெம்பாவை–திருப்பள்ளியெழுச்சி

திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார் எழுதிய உரையும், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் எழுதிய அணிந்துரையும் கொண்டது, சமாஜப் பொன்விழா வெளியீடுகளுள் ஒன்றாகப் பதிப்பிக்கப்பெற்றது. 176 பக்கங் கொண்டது. விலை ரூபா ஒன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஒன்பது.

## பெரியபுராண மூலம்

சமாஜ மூன்றாம் பதிப்பு, 708 பக்கங்கள், முழு கலிக்கோ பைண்டு, 50 பக்கங்களில் பல தலைப்புக்களில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்த அரும்பொருள் ஆராய்ச்சி அகராதி, யாப்புக் குறிப்பட்டவணை, திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண வரலாறு, பாட்டு முதற்குறிப்பகராதி முதலியவற்றுடன் கூடிய கையடக்கமான பதிப்பு. விலை ரூபா மூன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—2—0.

## திருப்போரூர்ச் சந்நிதிமுறை

சமாஜ இரண்டாம் பதிப்பு, ஆராய்ச்சி அகராதி, அரும்பதவுரை, குறிப்பு, பாட்டு முதற்குறிப்பு முதலியவற்றுடன் கூடியது. ராப்பர் பைண்டு விலை அணா பன்னிரண்டு.

**முருகன் முந்நூல்** — விலை அணா 3

பாம்பன்–குமரகுருதாச சுவாமிகள் அருளிய

**நாலாயிரப்பிரபந்த விசாரம்** — விலை ரூபா 1

**ஸ்ரீ சுப்பிரமணியத்தைக் குறித்த வியாசம்** — விலை ரூபா 1½

**செவியறிவுறூஉ** — விலை அணா 3

**சிவஞான தீபம்** — விலை அணா 8

பத்தாம் திருமுறை விலை ரூ. 1 }
பதினோராம் ,, ,, 1 } இவை மாவிலை செங்கல்வேல் முதலியார் பதிப்புக்கள்

தபாற்கூலி வேறு.

கிடைக்குமிடங்கள்:

1. பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1
2. 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1

Regd. M. 2330 "SIDDHANTHAM" Vol. 30—No.

18

# சைவ சித்தாந்த மகா சமாஜம்,

# பொன்விழா மலர்

மிக மிகக் கவர்ச்சியான வெளியீடு. இதில் ஐம்பத்தொரு கட்டுரைகள் உள்ளன. சமாஜத்தின் ஐம்பது ஆண்டுகளின் நிகழ்ச்சிகள் தெளிவாக எழுதப் பெற்றுள்ளன. ஐம்பதாண்டுகளில் நடந்த நிறைவு விழாக்களின் தலைவர்கள்; நடைபெற்றஇடங்கள்; மங்கையர் மாநாடு, இளைஞர் மாநாட்டு விவரங்கள் ; சமாஜத் தொண்டர்கள் தொண்டாற்றுமுறை பற்றிய குறிப்புக்கள்; உயர்திருவாளர்கள்: ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள், ஜே.எம்.நல்லசாமிப்பிள்ளை, ஸர். பொன்னம்பலம் இராமநாதன், பொன்விழாத்தலைவர் கனம் சு. நடேசப் பிள்ளை, திரு.வி.க. முதலிய முப்பதின்மர் உருவப்படங்கள் ; வேறு பற்பல சிறப்புக்கள் இதில் மிளிர்கின்றன. கட்டுரையாளர்களுள் டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார், டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி, தணிகைமணி ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேல் முதலியார், சித்தாந்த ரத்னாகரம் முத்து சு. மாணிக்கவாசக முதலியார், திரு. அ. மு. பரமசிவானந்தம் முதலியோர் உள்ளனர். இருநூற்று நாற்பது பக்கங் கொண்ட அழகிய பதிப்பு.

விலை ரூபா ஒன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா பன்னிரண்டு. உடனே முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்க. வி. பி. மூலம் அனுப்பப்படமாட்டாது.

கிடைக்கும் இடம் :

**பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.**

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V.K. Punithavathi. Edited by C M Ramachandran Chettiar, B.A., B.L., and Published by S.Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 2, Seetha Rama Nagar, Cuddalore N. T.

M. 2330 'SIDDHANTHAM' Vol. 30—No. 2

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே'

30 | துன்முகி மாசி 1957 பிப்ரவரி | இதழ் 2

உள்ளுறை

பாராட்டத்தில் வேதாந்தம் சிருட்டத்தில் சித்தாந்தம் ... 33
மாஜ 51-ம் ஆண்டு நிறைவு விழா 37
மாஜ 51-ம் ஆண்டு அறிக்கை ... 41
சவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை 43

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 MAR 1957
MADRAS

திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
2, சீதாராம நகர், கடலூர் N. T.

ஆண்டுச் சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

## 1957-ம் ஆண்டு சமாஜ உத்தியோகஸ்தர்கள்.

பெண்ணாடத்தில் 1-1-1957ல் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சமாஜக் காரியக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பெற்ற சமாஜ உத்தியோகஸ்தர்கள். (ஒவ்வொரு பெயர் முன் திருவாளர் என்றும் பின் அவர்கள் என்றும் சேர்த்துப் படிக்கவும்.)

தலைவர் : அ. சோமசுந்தரம் செட்டியார், உதவித் தலைவர்கள் : ச. சச்சிதானந்தம் பிள்ளை, நல். முருகேச முதலியார்; காரியதரிசி: இ. கி. நாராயணசாமி நாயுடு, உதவிக்காரியதரிசி: கே. க. கிருஷ்ணசாமி ; பொருட்காப்பாளர் : S. நடராஜ முதலியார் ; பத்திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், உதவிப்பத்திராசிரியர் : புலவர் - முருகவேள்; மாதக் கணித பரிசோதகர் : ம. சி. சம்பந்த முதலியார் ; ஆண்டுக் கணித பரிசோதகர் : சி. திருநாவுக்கரசு பிள்ளை ; செயற்குழுவினர் : வே. தியாகராய முதலியார், ச. நடேச முதலியார், பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், மு. நாராயணசாமி முதலியார், சி. வா. கிருஷ்ணமூர்த்தி, C. M. சிங்காரவேல் முதலியார், க. வடிவேலாயுதம், அம்பை சங்கரனார், அ. வேங்கடாசல முதலியார், சிவராமன், ம. பாலசுப்பிரமணியன்.

பத்திராசிரியர் குழுகம் :—தலைவர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார் ; காரியதரிசி : இ. கி. நாராயணசாமி நாயுடு ; உறுப்பினர் ; சி. இராமலிங்க முதலியார், அ. கு. காமாக்ஷியம்மையார், ச. சச்சிதானந்தம் பிள்ளை, டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி, வட்டுக்கோட்டை நாகலிங்கம் பிள்ளை, க. வச்சிரவேல் முதலியார், முத்து சு. மாணிக்கவாசக முதலியார், க. வெள்ளைவாரணனார்.

ஆராய்ச்சிக் குழுகம் :—C. M. இராமச்சந்திரன் செட்டியார், இ. கி. நாராயணசாமி நாயுடு, க. வச்சிரவேல் முதலியார், முத்து சு. மாணிக்கவாசக முதலியார், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.

வெளியூர் ஆலோசனை சபையினர் :—கோயம்புத்தூர் : V. C. சுப்பையா கவுண்டர், C. R. சதாசிவ முதலியார், G. R. தாமோதரம் ; சேலம் : பொம்மண்ண செட்டியார்.

Reg. M. 2330

உ
சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 30 | துன்முகி மாசி 1957 பிப்ரவரி | இதழ் 2

## போராட்டத்தில் வேதாந்தம் சூருட்டத்தில் சித்தாந்தம்

(ஆசிரியர்)

பண்டைக் காலத்தில் வடநாட்டில் ஒரு பெரிய போராட்டம் நிகழ்ந்தது. அது ஒரு தாயாதிச் சண்டை. ஒரு குடும்பத்தில் சொத்துக்களுக்காகத் தாயாதிகள் சண்டை பிடிப்பது போலவே ஒரு பெரிய அரச வம்சத்தில் இரு கட்சியினருக்குள் அரசியல் உரிமைகளைப் பற்றிப் பெரும் போர் விளைந்தது. நாட்டிலிருந்த மற்ற அரசர்களும் அதில் கலந்து கொண்டார்கள். ஒரு குறித்த நாளில் இரு கட்சியினரும் போர் அரங்கத்தில் சகல ஆயுதங்களுடனும் கூடி விட்டனர். அவர்களில் ஒரு புகழ்பெற்ற சிறந்த வீரன் போர் அரங்கத்தில் தேரில் ஏறிப் போர் புரியத் தயாராக இருந்தான். அவன் சொற்படி தேர்ப்பாகன் தேரை இரண்டு சேனைகளுக்கும் இடையில் நிறுத்தினான். இரு புறங் களிலும் போர் வெறி கொண்டிருந்த தன் இனத்தாரைக் கண்டு இந்தப் பெரும் கூட்டத்து வீரர்கள் எல்லாம் இரண்டு கட்சிக்காரர்கள் கொண்ட மண் ஆசையினால் மடி கின்றார்களே ! இவர்களைக் கொன்று நாம் என்ன பயன்

பெறுகின்றோம் என்று மனம் சஞ்சலமடைந்து தன் சாரதியை நோக்கிப் போர் செய்யமாட்டேன் என்று கூறி வில்லை நழுவவிட்டான். சாரதி கண்டு 'இது கோழைத் தனம், மற்றும் தன் கடமையைச் செய்வதே போர் வீரனுடைய நெறி' என்று கூறி உலக ஒழுக்கத்தைக் கூறுகிறான். இவ்வுரை 18 அத்தியாயம் கொண்ட ஒரு வேதாந்த நூல் ஆகப் பெருகிவிட்டது. இது நமது நாட்டில் இயல்பாக எழுந்த ஒரு செய்தி. ஆனால் மேல்நாட்டு வெள்ளையர்கள் இது இயற்கைக்கு மாறானது என்பார்கள். போர்முனையில் வேதாந்தம் எழும்புமா என்று ஐயுறுவார்கள். ஆனால் இது நடந்திருக்கலாம் என்று நாம் நம்புகிறோம்.

இனி, சீராட்டத்தில் எப்படி சித்தாந்தம் விளைந்தது என்பதை ஆராய்வோம். ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் நிவா நதிக்கு அருகில் ஒரு புனித பாடல்பெற்ற தலத்தில் ஒரு பெரிய மாளிகைக்கு எதிரே பெருந்தெருவிலே சில அழகிய சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களிலே ஒரு பிள்ளை வசீகரக் கண்ணோட்டமும் வயதிற்கு மீறிய அறிவு விலாசமும் மிளிர்ந்து மலர்ந்த முகத்தைக் கொண்டிருந்தது. அக்குழந்தை அவ்வூர்த் தலைவன் மதலை. சிறு தேர் ஓட்டி விளையாடிக் கொண்டிருந்த அக்குழந்தை வானவீதியை அண்ணாந்து பார்த்தது. அங்கே ஒரு புனிதப் பெருமகனாரின் தோற்றம் கண்டது. அப்புனிதப் பெருமகனாரும் அக்குழந்தையைக் கண்டார். உடனே குழந்தை அருகில் வந்தார். குழந்தை பக்குவநிலை உணர்ந்து "குழந்தாய் சிறு தேர் உருட்டுவதில் மகிழ்ச்சி என்ன இருக்கிறது. பெருந்தேர் உருட்டி உலகையே ஈடேற்றுதல் மகிழ்ச்சி அல்லவா?" என்றார்.

"எவ்வாறு அங்ஙனம் செய்யமுடியும்" என்றது குழந்தை.

"மக்களுடைய உள்ளங்களை ஒளிபெறச் செய்து விரிவு படுத்தின் அவைகளிலே சைவப் பெருந் தேர்களை விடலாம்" என்றார்.

எவ்வாறு உள்ளங்களை ஒளிபெறச் செய்து விரிவு படுத்துவது? என்று குழந்தை கேட்டது.



"சில கேள்விகளைக் கேள், அவைகளுக்கு விடைகளை நீயே ஆராய்ந்து பார். உள்ளங்கள் அப்போது ஒளிபெறும்" என்றார் முனிவர்.

"என்ன அக்கேள்விகள்" என்றது குழந்தை.

"மைந்தா, விளையாடுகிற நீ யார்? முதற் கேள்வி. உன்னை விளையாட்டி வைக்கிறவன் யார்? அது இரண்டாம் கேள்வி. அவனை அறியாமல் விளையாடலே பெரிதாக உன்னை மயக்குகிறது அல்லவா அது எது என்பது மூன்றாம் கேள்வி.

'மைந்தா இம்மூன்று கேள்விகளுக்கும் விடை அறிந்தாயா? ஆம். அவைகள், நான், அவன், அது என்பவை' என்றது குழந்தை.

சரி. 'இம்மூன்றின் தன்மைகளை அல்லது குணங்களை நீ ஆராய்ந்து அறியவேண்டும்' என்றார் முனிவர்.

வேறு கேள்விகள் உண்டா? என்றது குழந்தை.

'ஆம் மகனே, இம்மூன்றையும் அறிபவன் யார்? அறிவிப்பவன் யார்? அறியும் நிலை எது? இவைகள் 7, 8, 9 கேள்விகள். இவைகளுக்கும் மேலாக அறிந்து கொண்டால் நீ அடையும் பயன் என்ன என்பது மூவகை: ஆக 12 கேள்விகள் உண்டு. இவைகளில் விடைகளை நீயே ஆராய்வாய். பிறகு உலகிற்கு அறிவிப்பாய் என்று சொல்லி அருள் நோக்கால் நோக்கிவிட்டு முனிவர் மறைந்தார்.

அது முதல் அக்குழந்தை தன் சிறு விளையாட்டை ஒழித்துவிட்டு முனிவர் சொன்ன பெரும் விளையாட்டை ஆராயத் தொடங்கியது. அப்பன்னிரண்டு கேள்விகளுக்கும் விடைகள் தேடிற்று. முனிவருடைய அருள்நோக்கு பட்டிருந்ததினால் அவ்விடைகளையும் கண்டு பிடித்தது. பொதுமக்கள் அறியும்வண்ணம் சிறு சிறு சொற்களாலே அவ்விடைகளை அமைத்தது. அந்தவகையில் அமைந்த பன்னிரண்டு சூத்திரங்களே சிவஞானபோதம் என்ற மெய்கண்ட நூல் ஆயிற்று. ஆகவே விளையாட்டத்தில் விளைந்தது சித்தாந்தம் அல்லவா?

இந்தவகையில் ஒரு செய்தி நடந்தது என்று சொன்னாலும் மேல்நாட்டு வெள்ளையரும் நம் நாட்டுத் தற்கால

இளைஞர்களும் நம்பமாட்டார்கள். சிறு குழந்தையாவது சித்தாந்தம் எழுதுவதாவது என்பர். இங்கே குழந்தை என்பது அறிவுள்ள ஒரு இளைஞன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவன் இந்தப் பன்னிரண்டு கேள்விகளைக் கேட்க மாட்டானா? இவைகளுக்கு விடைகளை அறியமாட்டானா? எந்தப் பகுத்தறிவுள்ள மனிதனும் நான் யார், என் தலைவன் யார், அவனை அறியாமல் தடுப்பது எது என்ற சிறு கேள்விகளைக் கேட்கமாட்டானா? இக்கேள்விகளும் இவற்றை ஒட்டி எழுப்பும் மற்ற ஒன்பது கேள்விகளுமே சித்தாந்தத்தின் மூலம்.

தமிழ் மகன் பண்டைக்காலம் முதற்கொண்டே இக் கேள்விகளைக் கேட்டு விடைகளையும் ஆராய்ந்து வெளியிட்டான். இந்த ஆராய்ச்சியின் மூலமாக ஏற்பட்டதே சித்தாந்தம் ஆகும்.

இதனை ஆறு நூற்றாண்டுகளின் முன் மெய்கண்ட தேவர் சொன்னார். அதனை அவருடைய மாணாக்கர் அருணந்தி சிவம் விரித்தார். அதனை இன்னமும் பெரிதாக உமாபதி சிவம் பெருக்கினார். இம் மூவர் இயற்றிய நூல்கள் முறையே சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் என்பன. இவைகளை ஒட்டி மற்றும் பதினொரு சிறு நூல்கள் சேர்ந்தன. இந்தப் பதினான்கு நூல்களே சித்தாந்த நூல்கள்.

இவைகளை ஒவ்வொரு பெருமகனும் அறியவேண்டும் அல்லவா? அதைக் காரணமாகக் கொண்டு புனித மடாலயத்தார்கள் அழகிய வடிவில் இந்நூல்களை ஒரு பதிப்பாக வெளியிட்டிருக்கிறார்கள். இது போற்றத்தக்க செய்தி. பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுவார்களாக.

---

*குறிப்பு:—இவ்வுரை சென்னைத் தருமபுர மடாலயத்துப் பிரசார நிலயத்தார் சித்தாந்த நூல்களை வெளியிட்டபோது ஆசிரியர் பேசியது.

# சமாஜ
# 51-ஆம் ஆண்டு நிறைவு விழா

[G. கலியாணம், M. A., D. Econ.,]

சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 51-ஆவது ஆண்டு நிறைவு விழாவும், அதன் அங்கமாக சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும் 30—12—56 முதல் மூன்று நாட்கள் திருப்பெண்ணாகடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. ஆண்டு விழாவிற்கும் சைவர் மாநாட்டிற்கும் இலங்கை முன்னாள் அமைச்சர் திரு. சு. நடேசப்பிள்ளை அவர்கள், பி. ஏ., பி. எல். தலைமை வகித்தார்கள். சைவ மங்கையர் மாநாட்டிற்குத் திரு. ச. கற்பகவள்ளி, பி. ஏ., பி. எஸ். ஸி. (ஆனர்ஸ்) அவர்களும், சைவ இளைஞர் மாநாட்டிற்குத் திரு. புலவர். முருகவேள், பி. ஓ. எல்., அவர்களும் தலைமை வகித்தார்கள்.

நடு நாட்டின் பழம் பெரும் பாடல் பெற்ற பதிகளுள் ஒன்று திருப்பெண்ணாகடம். அப்பரடிகளுக்கு இறைவன் சூல இடபக் குறிகளைப் பொறித்தருளிய திருத்தலம். அறுபான் மும்மை நாயன்மார்களுள் கலிக்கம்ப நாயனார் வாழ்ந்த இடம். பொய் கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்டார் பிறந்தருளப் பெற்ற பேறுடையது அவ்வூர். தலைவர்களையும், சொற்பொழிவாளர்களையும் வரவேற்று வளைவுகள் ஊர்த்தெருக்களில் நாட்டப் பெற்றிருந்தன. 'சிவ சிவ' என்ற அட்டைகள் வீடுகள்தோறும் தொங்கவிடப் பெற்றிருந்தன. எங்கும் சிவமயம். திரு. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களுக்குச் சொந்தமான முத்துக் குமாரப் பூங்காவில் மாநாட்டுப் பந்தர் அமைக்கப்பெற்றிருந்தது. மாமரச் சோலை நீழலில் மேடை வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

30—12—56 முதல் நாள் காலை திருத்தூங்கானை மாடச் சுடர்க் கொழுந்தீசர் கோயிலிலும், களப்பாளர் மேட்டிலுள்ள மெய்கண்டார் ஆலயத்திலும் வழிபாடு நடந்தது. பிறகு தலைவர்களை ஊர்வலமாக மாநாட்டுப் பந்தருக்கு அழைத்துச் சென்றனர். தேவாரத் திருமுறைகள் ஓதிய பின் மாநாடு தொடங்கிற்று. திரு. ச. அரங்கசாமிப் பிள்ளையவர்கள் வரவேற்புரையை வாசித்தார்கள். திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் முன் மொழிய, திரு. ம.

பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் பின்மொழிய, திரு. நடேசப் பிள்ளையவர்கள் தலைமை யேற்றார்கள். சமாஜப் பொதுச் செயலாளர் திரு. தி. கி. நாராயணசாமி நாயடு அவர்கள் ஆண்டு அறிக்கையை வாசித்தார்கள். தலைவரவர்கள் தம் பேருரையை நிகழ்த்தினார்கள். அதில், தாம் சென்ற ஆண்டு பொன் விழாவில் தலைமை வகித்தும் இவ்வாண்டு விழாவிலும் தலைமை வகிக்க நேர்ந்தது இறைவன் திருவருட் செயல் என்றும், சைவசித்தாந்த வரலாற்றில் தலைசிறந்த இடம் பெற்றிருக்கும் மெய்கண்டார் பிறந்த திருப்பதியில் மாநாடு கூடியிருப்பது மிக மகிழ்ச்சி தருகிறதென்றும், ஆனால் இந்திய தரிசன நூல்களில் சைவசித்தாந்தம் நல்ல இடம் பெறாமல் இருப்பது வருந்தத்தக்கதென்றும், சைவம் உலகத்தைத் தன்னுள் அடக்கிய சமயம் என்றும், அது எல்லா மதத்தினருக்கும் ஆதாரம் கொடுப்பதென்றும், வேற்று நாட்டு ஞானிகள், சைவசமய குரவர்களைப் போல் ஆனந்த பரவச நிலையை வெளியிட்டு அநுபவங்களைச் சொன்னதாகத் தெரியவில்லையென்றும், பெண்ணைநடம் போன்ற பெரியோர் பிறந்த ஊர்களுக்குப் பெருமை கொடுக்காதது நம் நாட்டிலே தான் காணப்படுகிறதென்றும், நவரத்தினப் பேழை யிருந்தும் குருடன் காணமுடியாதவாறு போல புண்ணிய பூமியில் பிறந்தும் பயனடையாத பாவிகளாக இருக்கிறோம் என்றும், சமயக் கல்வியைப் பள்ளிகளில் கற்பிக்கவேண்டுமென்றும், சைவ சித்தாந்த வித்தியாபீடம் ஒன்றிருக்க வேண்டுமென்றும், கோயில் நிர்வாகிகள் தேவார திருமுறைகளை அறிந்து வளர்க்கவேண்டுமென்றும், சைவசித்தாந்த (இல்லற துறவற) போதகாசிரியர்கள் இருக்கவேண்டுமென்றும், இவைகள் எல்லாவற்றிற்கும் ஆவன செய்யச் சமாஜம் ஒரு ஊன்றுகோலாக நின்று பணிசெய்யவேண்டும் என்றும் கூறிமுடித்தார்கள். கடவுள் வாழ்த்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிந்தன.

மாலை 4-மணிக்குப் பேரவை துவங்கிற்று. இறைவணக்கத்தின்பின், வித்துவான். திரு. அடிகளாசிரியர் அவர்கள் "சைவ சமய உண்மைகளும் தமிழ் நூல்களும்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பேய்போல இறைச்சி கள் இவைகளை உண்டு வாழ்ந்த மக்



களை உயர்நிலைக்கு கொண்டுவந்தது சமயம் என்றும், ஒழுக்கம், கல்வி, உயர் அறிவு இவை சமய வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்றும், உயிர் உடம்பு இரண்டையும் பேணவேண்டுமென்றும், வினையை ஊட்டும் கடவுள் சைவ சமயத்திலன்றிப் பௌத்தம் சமணம் இவைகளில் கிடையாதென்றும், உலகத்தை அழிக்கும் காலத்தில் கடைசியில் கடவுள்தான் இருப்பன் என்றும் தொல்காப்பியம், கம்பராமாயணம், சங்க இலக்கியம், வடமொழி நூல்கள் இவைகளினின்றும் மேற்கோள்கள் காட்டி விளக்கினார்கள்.

பின்னர் வித்துவான் திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள், "திருமுருகாற்றுப்படை - சைவசித்தாந்த விளக்கமே" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். திருமுருகாற்றுப் படையில் முன் மூன்று பகுதிகளில் இறைவனைப் பற்றியும், பின் மூன்று பகுதிகளில் அடியாரைப் பற்றியும் கூறப்படுகிறதென்றும், 'சேவடி படரும் செம்மல் உள்ளமொடு.....நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்துறையும்' என்ற அடிகளில் நக்கீரர், இறை, உயிர், தளை இவைகளைக் குறிக்கிறார் என்றும், ஆன்மாக்களுக்குக் கேவலம், சகலம், சுத்தம் என்ற நிலைகள் உண்டு என்பது பரங்குன்றத்தில் தாமரை புகும் வண்டினங்களைப் பற்றிக் கூறுவதில் அமைந்துள்ளதென்றும் விளக்கமாகப் பேசினார்கள். தலைவர் அவர்கள் கருத்துரையுடன் கூட்டம் இரவு 8 மணிக்கு இனிது முடிந்தது.

31—12—56 இரண்டாம் நாட் காலையில் சைவ மங்கையர் மாநாடு தொடங்கிற்று. திரு. ச. கற்பகவல்லியம்மையார் அவர்கள், தம் தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்கள். திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் 'விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்' என்பது பற்றியும், வித்துவான் மறை. திருநாவுக்கரசு அவர்கள் 'ஆறியந்தம்' என்பது பற்றியும், விழாத் தலைவர் திரு. நடேசப் பிள்ளையவர்கள் சைவ சமயத்தில் பெண்களின் பங்கு என்ன என்பதைப்பற்றியும் பேசினார்கள். தலைவியர் கருத்துரையுடன் சைவ மங்கையர் மாநாடு முடிவுற்றது.

மாலை 4-மணிக்கு சைவர் மாநாடு தொடங்கிற்று. வித்துவான் திரு. அருணை வடிவேல் முதலியார் அவர்கள் "திருத்தொண்டின் நெறி" என்ற தலைப்பில் அறிவு நெறி,

அன்பு நெறி என்ற இரண்டு உண்டு என்றும், நம் சமயப் பெரியார்கள் வளர்த்த நெறியை நாம் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் கூறினார்கள். பின்னர் வித்துவான் திரு. அ. நடேச முதலியார் அவர்கள் "இன்றைய சமயப் பணி" என்று எடுத்துக்கொண்டு மற்ற மதங்களைப் போல் சைவ சமயத்திலும் சமய வாழ்வு, சமய அறிவு, சமயப் பிரசாரம் இவைகளைப் பரப்ப ஆவன செய்தல்வேண்டும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு, வித்துவான் திரு. ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் 'அருள் இயக்கம்' என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினார்கள். மேல்நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்த உண்மைகளையும், நம் சைவ சித்தாந்த உண்மைகளையும் ஒப்பிட்டு, படங்களுடன் திருவருள் இயக்குவதால் எல்லாம் இயங்குகின்றன என்பதை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். கடவுள் வாழ்த்துடன் இரவு கூட்டம் முடிந்தது.

1—1—57 மூன்றாம் நாட்காலையில் சமாஜ அங்கத்தினர் காரியக் கூட்டம் நடை பெற்றது. காரியஸ்தர்கள் தேர்தல், தீர்மானங்கள் முதலியன நிறைவேறின. பின்னர் திரு. புலவர் முருகவேள் அவர்கள் தலைமையில் சைவ இளைஞர் மாநாடு நடைபெற்றது. தலைவர் அவர்கள் தம் தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்கள். அமுதமொழி திரு. சுவாமிநாதப் பிள்ளை அவர்கள் 'திருமந்திரம்' என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். தலைவர் கருத்துரையுடன் இளைஞர் மாநாடு முடிவடைந்தது.

மாலை 4-மணிக்கு சைவப் பேரவை கூடிற்று. திருவாளர்கள் சாம. இராமலிங்கம், க. வச்சிரவேல் முதலியார் இவர்கள் முறையே, 'திருவண்டப் பகுதியின் நுட்பம் - மாணிக்கவாசகர் பேறு' 'நம்பியாண்டார் நம்பிகள்' என்னும் பொருள்களைப் பற்றிப் பேசினார்கள். தலைவரவர்கள் தம் விரிவான கருத்துரையை நிகழ்த்தினார்கள். வரவேற்புக் கழகச் சார்பில் திரு. அரங்கசாமிப் பிள்ளையவர்களும், சமாஜச் சார்பில் பொதுக்காரியதரிசியும் யாவருக்கும் நன்றி கூறினார்கள். சிவநாம முழக்கத்துடன் இரவு 9-மணிக்கு மாநாடு இனிது முடிந்தது.

மூன்று நாட்களிலும் திரு. கலியாணசுந்தர தேசிகரும், விருத்தாசலம் தேவார பாடசாலை மாணவ மாணவியரும் இடையிடையே இன்னிசை விருந்தளித்தனர். வெளியூரிலிருந்து வந்த அனைவர்க்கும் "உண்டி நாலுவிதத்தில் ஆறு சுவைத் திறத்தினில்" உணவு அளித்து, தங்கும் வசதிகளையும் செய்து கொடுத்தது மிகவும் பாராட்டத்தக்கது. அதற்கு வரவேற்புக் கழகத்தினர்க்கு நன்றி உரித்தாகுக.



---

# சமாஜ 51-ம் ஆண்டு அறிக்கை

(மலர் - 30 ; இதழ் - 1; 16-ம் பக்கத்தொடர்ச்சி)

28–5–56-ல் திருநாவலூர் செந்தமிழ்க் கழகத்தினர் சமாஜ மாதக்கூட்டத்தினை நடத்தித் தந்தார்கள்.

வரவு செலவுக் கணக்கு :—51-ம் ஆண்டு (1–12–55 முதல் 30–11–56 வரை) வரவு செலவுக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடு இறுதியில் தரப்பட்டுள்ளது.

சமயப் பற்றற்ற அரசுரிமை பெற்றிருக்கின்ற நம் நாடு மொழிவழி பிரிந்து அரசு இயங்கத் தொடங்கும் இந்நாளில், சைவர்களின் சமய வாழ்வு வளம்பட மடாலயங்களும், அறநிலையங்களும் துணைபுரிந்தாலும், பொது மக்களின் சார்புடையதாகிய இச் சமாஜம் தொடர்ந்து சிறந்த பணியாற்றி வரவேண்டுவது முன்னிலும் இன்றியமையாக் கடமையாகிறது. இதனைச் சைவக் குடும்பத்தினர் தலையாய கடமையாக ஏற்றுச் சமாஜ ஆண்டுச் சந்தா ரூபா 3 செலுத்தி, 'சித்தாந்தம்' இதழை இலவசமாகப் பெற்றுச் சமாஜத் தொண்டினைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

நன்றி :—சமாஜத்திற்கு உதவிபுரிந்த உறுப்பினர், செயற்குழுவினர், சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்தஜன சபையினர், சைவத் தேர்வுகளின் அதிகாரிகள், மேற்பார்வையாளர், 'சித்தாந்தம்' முதலியவற்றைச் செம்மையாக அச்சிட்ட 'சாது' அச்சகத்தினர், வெளியூரில் சமாஜச் சமயக் கூட்டங்களை நடத்தித் தந்த அன்பர்கள், சொற்பொழிவாளர்கள், சமாஜ அன்பர்கள் யாவர்க்கும் சமாஜம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு

**தி. கி. நாராயணசாமி நாயுடு,**

**பொதுக் காரியதரிசி.**

## சமாஜ 51-ம் ஆண்டின் வரவு செலவுக் கணக்கு

(1–12–1955 முதல் 30–11–1956 வரை)

| வரவு | ரூ. | அ. | பை. | செலவு | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| சாதாரண சந்தா | 1330 | 0 | 0 | சித்தாந்தக் காகிதம்,அச்சுக்கூலி, ராப்பர், அறிக்கைகள் . | 1169 | 15 | 0 |
| ஆயுள் சந்தா | 101 | 0 | 0 | பேனா புத்தகம் | 1 | 12 | 0 |
| நன்கொடை | 500 | 0 | 0 | தபால் வகை | 133 | 0 | 9 |
| தேர்வுக் கட்டணம் | 3 | 0 | 0 | போக்குவரவு, பிரயாணச் செலவு | 6 | 15 | 0 |
| புத்தக விற்பனை | 130 | 7 | 6 | சித்தாந்தம் எடு கூலி, ஒட்டுதல் | 7 | 4 | 0 |
| தபால் வகை (வி. பி. வரவு) | 76 | 2 | 0 | பலவகைச் செலவு | 156 | 13 | 6 |
| பலவகை வரவு | 423 | 2 | 0 | இந்தியன் பாங்கி (deposits) | 1722 | 3 | 0 |
| பாங்கி வட்டி | 29 | 1 | 0 | பாங்கி கமிஷன் | 1 | 0 | 0 |
| இந்தியன்பாங்கி(Withdrawals) | 595 | 1 | 0 | பொருளாளர்ரொக்கக்கையிருப்பு | 26 | 12 | [illegible] |
| ஆரம்பக் கையிருப்பு | 43 | 14 | 6 | | | | |
| மொத்தம் | 3231 | 12 | 0 | மொத்தம் | 3231 | 12 | 0 |

சமாசப் பொருள் வலிவு : இந்தியன் பாங்கி கணக்கில் இருப்பு ரூ. 2187—5—11.

| சி. திருநாவுக்கரசு | தி. கி. நாராயணசாமி நாயுடு | ம. கி. நித்தியானந்தம் | ச. நடராஜ முதலியார் |
|---|---|---|---|
| ஆண்டுக் கணக்குப் பரிசோதகர். | காரியதரிசி. | பொருளாளர். | மாதக் கணித பரிசோதகர். |

| வரவு | ரூ. | அ. | பை. | செலவு | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| புத்தகம் விற்று வரவு | 333 | 5 | 3 | காகிதம் வாங்கியது | 165 | 14 | 3 |
| தி. கி. நா. வரவு | 0 | 4 | 9 | ம. பா. மணிவிழாச் செலவு | 79 | 8 | 6 |
| | | | | தபால் வகை | 83 | 11 | 3 |
| | | | | புத்தகங்கள் மாற்ற வண்டிக்கூலி | 30 | 0 | 0 |
| | | | | சித்தாந்த முகவரி அச்சுக்கூலி | 24 | 0 | 0 |
| மொத்தம் | 383 | 10 | 0 | மொத்தம் | 383 | 10 | 0 |

### சமாஜ 51-ம் ஆண்டு விழாவின்

# சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை

ச. கற்பகவள்ளி அம்மையார், (B. Sc. Hons.)

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரிய பெரியவனது திருவருள் நிரம்பப்பெற்று, புண்ணியம் திரண்டுள்ளது போன்று குழுமியிருக்கும் இப்புனிதர் பேரவையிலே, பூசுவாரைக்கண்டு பூசும் அவ்வளவே திருநீற்று நெறியைத் தெரிந்து வைத்த என்னை, தலைமை 'என்ற பெரிய மகுடத்தோடு நிறுத்தி வைத்திருக்கிறார்கள். பொன்னாண்டாகிய ஐம்பது நிறைந்து, அடுத்த ஆண்டின் நிறைவு விழா நிகழ்கிறது இப்போது. இவ்விழாவுக்குரிய அழைப்பிலே குறித்துள்ளபடி, நமது நாடு மொழிவழி அமையப் பெற்ற பின்னர் நிகழும் முதல் மாநாடு இது. கூடும் இடம் மெய்கண்டார் தோன்றி யருளிய திருப்பதி. இவை போன்ற சிறப்புக்கள் அமையப்பெற்ற இவ் ஆண்டுத் திருக்கூட்டத்திலே சிறப்பான பங்குபெறக் கொடுத்து வைத்தமை பற்றிச் சற்றுப் பெருமைதான் ஏற்படுகிறது. ஆயினும் என் அறிவாற்றலின் சிறுமையையும் என் ஆண்டு அநுபவங்களின் குறைவையும் நோக்க, ஏற்றுக்கொண்ட பொறுப்பு சாலவும் பெரிதே. ஆயினும் முழுப் பொறுப்பு என்னதல்லவே! என் இளமைக்குரிய மதிக் குறைவாலும், துணிவாலும், "உறுவினை காய்வோன் உயர்வு வேண்டல் பொய்" என்ற ஒரு நியாயம் பற்றி ஏற்றுக் கொண்டேன் எனினும், ஏற்பித்த பெரியவர்களே பொறுப்பேற்பர்— என்றால் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டால்.

இங்கே சொன்னது ஏதோ முறைக்காகச் சொல்ல வந்த வெற்று அவையடக்கம் அல்ல. தலைமை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நமது அமைச்சரவர்களது கட்டளையைக் கண்டவுடனேயே, என் தகுதியின்மைக்குரிய காரணங்களில் ஒன்றாக முதலில் பட்டது எனக்குத் தீக்கை இல்லாமை. இதை என் தந்தையாரவர்களிடம் சொன்னேன். அவர்கள் வயிறு குலுங்கச் சிரித்துவிட்டார்கள். "உன்னை அழைத்து எழுதியிருக்கும் அன்பரே தீக்கை

பெற்றுக்கொண்டவர் அல்லவே! நமது சமாசப் பொதுக் காரியதரிசியாகப் பல ஆண்டுகள் தொண்டாற்றிய பேரன்பரும் அப்படித்தானே!" என்று விளக்கம் சொன்னார்கள். தீக்கை இல்லாமலே அப்பேரன்பர் இருவரும் சைவத்துக்குச் செய்துள்ள பெருந் தொண்டுகளை எடுத்துக் காட்டினார்கள். வளர்ப்பானேன். அப்பாவும் ஒப்புக்கொள்ளவே சொன்னார்கள். தன் குஞ்சு அல்லவா? பொன் குஞ்சு தானே! அவையத்து முந்தியிருப்ப நண்பர் செய்ய முன் வந்தபோது "உறுவினை காய்வோன் உயர்வு வேண்டல் பொய்" என்று அமைக, அருள் அனைத்தும் ஆட்டும் என்று முடித்துவிட்டார்கள். சந்நிதியிலே நிற்கிறேன்—திருவருளையும், பெரியார் பொறுமை யருளையும் எதிர்நோக்கி.

தீக்கை பற்றிய நினைவு எனக்கு நேர்ந்தது இந்தத் தூங்கானை மாடத்துத் தொடர்பு பற்றி. தூங்கானை மாடத்துச் சுடர்க் கொழுந்தின் அடிபரவி, "பொன்னார் திருவடிக்கு" என்றெடுத்து, "நின் இலச்சினை இட்டருள்" என்று கேட்டு, நம் அப்பர் தம் அப்பனது "மூவிலைச்சூலம் சினவிடையுடன் சாத்த"ப் பெற்ற செழும்பதியல்லவா இது?

மேலே வந்த பகுதியை எழுதும்போது "அப்பர்" என்றும் "அப்பன்" என்றும், சொல்ல நேர்ந்ததல்லவா? இவ்விரு சொற்களின் மீதும் எண்ணம் ஓடுகிறது. இரண்டு சொற்கள் என்பது தவறு; அவையிரண்டும் ஓரே சொல்லின் இரண்டு உருவங்கள் என்பதே சரி. சைவத் திருநெறியிலே "அப்பன்" ஒருவனே, "அப்பரும்" ஒருவரே; "அம்மை" ஒருத்தியே, "அம்மையாரும்" ஒருவரே. "அவனை" "அவர்" பாடியது என்று சங்க நூல்களில் வரும் "அவன்" என்று ஈத்துவக்கும் மன்னனைக் குறித்தும், "அவர்" என்று ஏற்றுங்கொள்ளும் வறுமைப் புலவரைக் குறித்தும். இதுதான் தமிழனது காலங்கண்ட மரியாதை போலும். ஆண்டவனை அவன் என்றும் அப்பன் என்றும் உரிமை கொண்டாடி ஒருமையினால் குறிக்கும் தமிழன், அடியவரை அவர் என்றும் அப்பர் என்றும் கண்ணிய உணர்வினால் பன்மையுருப்பெய்து பயனிலை அடைகிறான். கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்டு அடிபட்ட கண்ணனையும் புறக்கணித்து, ஆழ்வார் திருவடிகளிலே தலைசாய்த்து ஈடுபடும் மதுரகவிகளின் நினைவு இங்கு எழுகிறது. வைணவத்தில் மட்டுமா இவ்வகை ஈடுபாடு? அப்பூதியடிகளின் ஈடுபாடு அப்பர் திருவடிகளுக்கு அன்றோ!



தேவாரத்து அடங்கன் முறை அவ்வளவையும் கடைந்தெடுத்து இவையே திரண்ட பொருள் என்று அகத்திய முனிவர் காட்டியருளியதாக வழங்கும் எண் பொருள்களில், எட்டாவது பயனிலைப் பொருளாக மிளிர்வது தொண்டுதானே! பன்னிரண்டாம் சூத்திரம் பயின்ற பொருள்களில் சிறந்தது தொண்டர்தம் சேவையே என்றால் பழுதில்லையே? நம் சமயத்துக்கே உரிய பெருவைப்பு எனத்தகும் பன்னிரண்டாம் திருமுறையின் உண்மைப் பெயர் "திருத்தொண்டர் புராணம்" தானே! இத் திருமுறைதானும் விரியாக அமைய, கருவாகத் தோன்றிய திருத்தொண்டத் தொகையினைத் தருவதற்காகவே யன்றோ, நம்மை ஆளுடைய நம்பிகள், மாதர்மேல் மனம் வைத்தது. தொண்டே சமயத்தின் உயிர்நிலை. தொண்டர்தம் வாழ்க்கை வரலாறுகளே சமய நெறியில் நம்மைச் செலுத்துவன, செலுத்தி நிறுத்துவன, நிறுத்தி வாழ்விப்பன, வாழ்ச்சி தந்து உய்விப்பன, உய்தி பெறுவித்து மாறா மகிழ்ச்சியில் மலர்விப்பன.

அம்மையும் அப்பனும் இல்லாத, ஆனால் அம்மையப்பனாகிய, நம் கடவுள் "இவன் நம்மைப் பேணும் அம்மை காண்" என்று தன்னிற் பிரியாதமைந்த அம்மைக்குக் குறிப்பிட்டுக் காட்டியருளியதோடு, "அம்மையே" என்று அழைக்கவும் அழைத்தானே—காரைக்கால் பேயாரை! அப்புனிதவதியாரின் வழிவந்தவர்கள் நாம் என்று எண்ணும்போது இந்த மனிதப் பிறவியும் வேண்டுவதே என்று உவகை பொங்குகிறதல்லவா!

இப்புனித நினைவலை "எங்கள் தெய்வம்" என்று தொண்டர் சீர்பரவவல்லார் தம் திருவாய் பொலியப் பாராட்டிப் பரவியுள்ள மங்கையர்க்கரசியாரின் நினைவை எழுப்புகிறது. வானவர் திருக்குலத்துக்கு ஒரு கொழுந்து; பாண்டி மாதேவி; பாண்டியன் ஒருவனுக்கேயல்ல, தென்னர் குலத்துக்கே வந்த பழிதீர்த்த தெய்வப்பாவை; மன்னனுக்கு உண்மையான வாழ்க்கைத் துணையானதோடு, மன்னுலகையும் வாழ்வித்த வழித்துணை. அன்று மட்டுமல்ல,

அவனுக்கு மட்டுமல்ல, அந்நாட்டுக்கு மட்டுமல்ல—என்றும் எந்நாட்டுக்கும், யாவர்க்கும், தனி அரசி, நங்கள் தெய்வம்.

அம்மையார், அரசியார் என்ற இவர்களோடு, நம்பிகளை நமக்கு அளித்தருளிய திருத்தாயார்—இம்மூவரும் திருத்தொண்டத் தொகையில் சிறப்புறப் பெயர் பெற்றது போலத், திருத்தொண்டர் புராணத்திலும் தனிப் புராணம் பெற்றுள்ளனர். ஆனால் இவர்களோடு நமது அப்பருக்கு வாழ்வளித்த தமக்கையாரை மறக்க முடியுமா? அப்பூதியடிகள், சிறுத்தொண்டர், இயற்பகையார், இளையான்குடியார், திருநீலகண்டத்தார் முதலிய நாயன்மார்களின் நாயகிமணிகளை மறக்க ஒண்ணுமா? பெரிய புராணம் போற்றும் பெரியவர்களின் பெருமையில் எல்லாம், பெண்மை உரிய இடம் பெற்று மிளிர்கிறது. இந்த உண்மையை உன்னி, உணர, உணர, நம் பெண் மக்கள் வாழும் வகை அறிவர். தாமும் வாழ்ந்து, தம்மவரையும் வாழ்ச்சி பெறுவிப்பர். "வாழ்வரசி" என்று பெண்பாற் பெயர் ஒன்று இருப்பதுபோல, "வாழ்வரசன்" என்று ஆண்பாற் பெயர் இருப்பதாகத் தெரியவில்லை.

இப்படிச் சொல்வதனால் ஆண்களைக் குறைத்தபடி அன்று. ஆண் என்ற சொல்லு ஆள் என்ற பகுதியினடியாக வந்தது என்று கேட்டிருக்கிறேன். நம்மையெல்லாம் ஆள்கின்றவர்கள்; ஆளமுடியாவிட்டாலும், ஆளமுயல்பவர்கள். பெண்களை மட்டுமல்ல, நம்மிற் பிற ஆண்களையுமே ஆண்டு அடக்க முனைபவர் ஆண்கள். இவ் ஆட்சி முயற்சியும், முனைப்பும், சிறப்பாக அறிவினின்றும் எழுவது. அறிவானது அறிந்த அளவிலேயே, அது சிறிதளவேயானாலும், அவ் அளவுக்குரிய ஆற்றலாக வெளிப்பட்டுவிடும். இது அறிவின் இயற்கை. ஆணியல்பு பெரும்பாலும் இப்படியே. ஆணில் பெண் உண்டு, பெண்ணில் ஆணும் இருப்பது போல. பெரும்பான்மை பற்றிச் சொல்வது இங்கே. ஆண் அடக்கும் என்றால், பெண் அடங்கும் என்பதல்ல. பெண் என்ற சொல்லும் பெட்பு என்ற சொல்லும் உறவுடையன. பெட்பு என்பது அன்பு. அன்பு அடங்குமா? அடங்குவது போல இருக்கும். ஆனால் உண்மையில் ஆள்வது, மேல் ஓங்குவது அதுவே. அன்புக்கும் உண்டோ அடைக்கும்



தாழ்? அன்பை அடக்கும், அடைக்கும், தாழ்ப்பாள் இல்லவே இல்லை.

ஓர் எடுத்துக் காட்டினால் விளக்க விரும்புகிறேன். "மருள் நீக்கியார்" என்பது பெயரளவில் மட்டுமன்று. மனத்திலே முகிழ்த்தெழும் சுருள்களை எல்லாம் நீக்கி, அம்மனமாகிய மலரை மலர்விக்கும் கலைகளை எல்லாம் பயின்றவர். செழுங்கலையின் திறங்களெல்லாம் முறைமையில் பயின்று அறிவு முதிர்ந்தவர். அவ் அறிவும் அனுபவத்துக்கு வாராமல் மூளையளவிலே முடங்கிக் கிடந்த அறிவல்ல. நிலையாமை கண்டு அறங்கள் செய்வாராய், காவளர்த்தும், குளம் தொட்டும், கடப்பாடு வழுவாமல் மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும், விருந்தளித்தும், நாவலர்க்கு வளம் பெருக நல்கியும், நானிலத்துள்ளோர் யாவருக்கும் தவிராத ஈகை வினைத்துறை நின்றார். பெற்றோர் பிரிந்தமை, அந்கையாரை மகட் பேசிய கலிப்பகையார் இறந்தமை, அவ் அக்கையார் கைம்மை நோன்பு முதலியன கண்டு நிலையாமை யுணர்வே மீதூர, மனம் மறுகி மதமாற்றங் கொண்டார். அதுவும் அறிவுக் குறைவால் அன்று: "நம்பர் அருளாமையினால்" என்பதுதான் சேக்கிழார் தருகின்ற விளக்கம். போன இடத்தும் அறிவு வாளா கிடக்கவில்லை. மேலும் வளர்ந்தது. அமண் சமயத்து அருங்கலை நூலான எல்லாம் பொங்கும் உணர்வுறப் பயின்றே அந்நெறியில் புலன் சிறந்தார். அவ் அறிவுச் சிறப்பினாலேயே அங்குத் தருமசேனர் என்ற பெயரும் பெற்றார். பிறரை வாதின்கண் வென்று ஒளியுடைய வித்தகராய் அமண் சமயத் தலைமையினில் மேம்பட்டார். ஆயினும், அவ் அறிவெல்லாம் என்ன ஆயிற்று? தம்பியார் உளராகவேண்டும் என்று தமக்கையார் வைத்த தயவும், அப் பெருந்தகையார் "அடியேன் பின் வந்தவனை எடுத்தாளவேண்டும், அவமொன்று நெறி வீழ்வான் வீழாமே அருளும்" என்று செய்துகொண்ட விண்ணப்பமும், மருள் நீக்கியாரை அப்பராக்கியது. அறிவு பேர் தந்தது, புகழ் தந்தது; ஆனால் நெறியினின்றும் பிறழ்த்தியது. அன்பு அடங்கியிருந்தது; பிறரறியாவண்ணம் ஒடுங்கிக் கிடந்தது: ஆனால் தன்னையும் காத்து, தன்னவரையும் காத்தது: ஏன், உலகத்தையே வாழ்வித்தது.

இன்னொரு வரலாற்றையும் எடுத்துக்காட்டும் நினைவு எழுகிறது. செய்வகை இடையே தப்பிய தென்னவனும், அவனையும் அவனோடு நாடு முழுவதையுமே, திருத்தியாட்கொண்ட நங்கள் தெய்வத் திருமானியாரும் நினைவில் வருகிறார்கள். அரசன் அறிவில் குறைந்தவனல்ல. அறிவோடு ஆற்றலும் ஆற்றப் படைத்தவன். அரசியலானைச் செருக்கும் சேர்ந்தது. அரசியாரோ பெண்மையே உருவானதொரு திருமேனி. அவரது அன்பின் நீர்மையே, அவ் அன்பினின்றும் உருவாகிய தொண்டின் சீர்மையே, மீனவற்கு உயிரை நல்கியது; மெய்ந்நெறி காட்டி உய்யக்கொண்டது, திருநெறியை வாழ்வித்தது. அன்பு தோல்வியே அறியாதது. அன்பு அடங்கித் தோன்றினாலும் உண்மை வெற்றி அதற்கே. அறிவு தன் வலாமையை அறியாமல் ஆரவாரம் செய்யும்; ஆனால் அன்பின் ஆட்சியில் ஒடுங்கியேவிடும். ஆண் தன்மை அறிவுபோல. பெண் தன்மை அன்பு போல. ஆண் ஆள முனையும், ஆள்வதுபோலத் தோன்றும்: பெண் தாழ்ந்தே போகும்; உண்மையில் ஆள்வது அதுவே.

ஆணைக் குறைத்தோ பெண்ணை ஏற்றியோ பேசியது இல்லை. மேலெல்லாம் ஆண் அறிவு என்றால், பெண் அன்பு. ஆணும் பெண்ணும் இல்லாமல் வாழ்வு இல்லை; அப்படியே அறிவும் அன்பும் இல்லாமல் வாழ்க்கையே இல்லை. அறிவு கையோங்க வேண்டிய இடங்களுண்டு; அப்படியே அன்பு ஆட்கொள்ள வேண்டிய இடங்களும் உண்டு. மூளை இன்றியமையாததே; ஆனால் மூளையால் மட்டும் முழு வாழ்வு அமைந்துவிடாது. நெஞ்சம் இல்லாமல் வாழ்வே இல்லை.

ஆணும் பெண்ணும் இணைந்து செல்வதே பொதுவாக வாழ்க்கை நிலை என்பதுபோல, அறிவும் அன்பும் இணைந்து சென்றால்தான் வாழ்க்கையால் எய்தும் பயன்களை எல்லாம் எளிதில் எய்தலாகும். ஆயினும் சமய வாழ்வு என்ற துறையிலே அன்புக்கே ஆதிக்கம். இந்த ஓர் உண்மையை ஒரோ வழி உணர்விக்கவே என் தலைமை யுரையில் முயல்கிறேன்.

"ஏதுக்களாலும், எடுத்த மொழியாலும் மிக்கு, (மிக்கு)ச் சோதிக்க வேண்டா" என்ற திருப்பாசுரக் கட்டளையை ஓரவேண்டும், உன்னவேண்டும். இதற்குச்சேக்கிழார் தரும் உரையையும் உளங்கொள வேண்டும். "ஏது எடுத்துக்காட்டு அன்னவற்றால் அளப்பிலன் என்பதாம்" என்கிறார். அதாவது தர்க்க வாதங்களால் அகப்படான் என்பது. "He is beyond formal proof and mere Logic. I feel it, but I cannot prove it: "நான் உணர்கிறேன், ஆனால் மெய்ப்பிக்க முடியாது" என்கிறார் காந்தியண்ணலும். ஆனால் "சுடர்விட்டுளன் எங்கள் சோதி" என்ற பகுதிதான் உயிர்ப்பகுதி; உயிருக்கு உறுதி தரும் பகுதி. "சுடர்விட்டுளன் என்பது அன்பில் ஊன்ற, உள் எழும் சோதியாய் நின்றனன், என்று காண்பார்க்கு இது பொருள் என்றதாம்" என்று உரை விரிக்கிறார் சேக்கிழார். அறிவுக்கு எட்டாத அப்பரம் பொருள் அன்புக்கு அகப்பட்டு, "இது" என்று சுட்டியே காட்டிவிடும் நிலைமைக்கு வந்து விடுகிறது.



இங்கே எங்கள் பரம்பரை முதல்வர் காட்டியருளிய வள்ளலார் கைவண்ணம் நினைவுக்கு வருகிறது. இந்தச் சைவத் திருக்கூட்டத்திலே வரலாற்றை நீட்டிக் கொண்டிருக்கமாட்டேன். கண் மலர்கள் நீர் ததும்ப, கைம்மலர்களால் பிசைந்து, வண்ணமலர்ச் செங்கனிவாய் மணி அதரம் புடைதுடிப்ப, புண்ணியக் கன்றனையவர்தாம் பொருமி அழுதருளினார். அழுதழைத்துக்கொண்ட அந்தச் சிறிய பெருந்தகையாரது திருவுருவத்தைச் சேக்கிழார் இப்படி எழுதுகிறார் நமது உள்ளக்கிழியிலே. "யாரளித்த பாலடிசில் உண்டது நீ?" என வெகுண்டு, "எச்சில் மயங்கிட உனக்கு ஈது இட்டாரைக் காட்டு என்று, கை-காணாது என்றோ, அவ் எச்சில் உண்ட பிள்ளையைத் தீண்டலாகாது என்றுதானோ (சேக்கிழார் இதுஅது என்று சொல்லவில்லை). "ஒரு மாறு கொண்டு" ஓச்சினார் தகப்பனார். அப்போது "ஆனந்தக்கண் துளிபெய்து, உச்சியினில் எடுத்தருளும் ஒரு திருக்கை விரல் சுட்டி"........என்று மேலே நிகழ்ந்த பெருநிகழ்ச்சியைப் பேசிப் போகிறார் சேக்கிழார்.

அச்சிறிய பெருந்தகையார் ஆனந்தக்கண் துளிபெய்து உச்சியினில் எடுத்தருளும் ஒரு திருக்கையின் அந்த ஒரு விரலிலே ஈடுபடுகிறார் எங்கள் முதல்வர். பாங்குள நாம் தெரிதும் எனத் துணிந்து, நான்கு அல்ல, கோடிப் பழமறைகள் ஈங்கு உளது என்று, ஆங்கு உளது என்று, ஓடி ஓடி, இளைத்து இளைத்து, தொடர்ந்து தொடர்ந்து, எட்டும் தோறும் வாங்குபரவெளி முழுதும் நீண்டு நீண்டு, மறைந்து

மறைந்து, ஆனால் ஓரோவழி ஒளிர்ந்துகொண்டே தோன்றும் அரும் பெரும் சோதி; மொழிக்கு அப்பால்பட்டு ஒளிரும் பொருள்; சிந்தையும் செல்லாச் சேண்மைத்து; "அவாங் மனா கோசரன்" வேதங்கள் ஐயா என, ஓங்கி ஆழ்ந்து அகன்ற, நுண்ணியன்; நேதி நேதி, இஃது இல்லை, இஃது இல்லை என்று ஒதுக்குமே ஒழிய வேதமானது "இது பொருள்" என்று சொல்லவில்லை. வேதம் அறிவு தானே—அறிவுக்கு எல்லாம் அப்பாற்பட்டவன் அவன். வேதம் கண்டதில்லை, கண்டதாகச் சொல்லவுமில்லை.

வேதத்தின் முயற்சி அதுவாக, ஆகமம் ஒன்று செய்தது. எங்குமுள்ள பொருள்தானே, எங்கும் காணலாமே என்று முயன்றது. வாய்ப்பான இடம் ஒன்றைத் தேர்ந்து, தூய்மை செய்தது. நீராலும், மந்திரத்தாலும் மேலும் தூயதாக்கியது. இயந்திரம் அமைத்தது. அதற்கு வேறுபல மந்திரம், கிரியை முதலியவற்றால் ஆற்றல் ஊட்டிற்று. பீடம், கருவறை, பெருமண்டபம், திருச்சுற்று முதலியன அமைத்துக் கோயில் எடுத்தது. பூசையோடு சிறப்புக்களும் ஏற்படுத்தியது. எல்லாம் ஆண்டவனைக் கண்டுவிடத்தான்; எங்குமுள்ள பரம்பொருளை இங்கே கண்டுவிட.

பவுரி என்பது ஒரு கூத்து. வலம் இடமாகச் சூழ்ந்தாடும் கூத்து என்பது உரைக் குறிப்பு. வேதாகமங்கள் ஒன்றோடொன்று ஒவ்வாது கூறும் பல பேத சமய நெறிகளைக் கூத்தாக்கினார் என்று காட்டுகிறார் உரையாசிரியர். வேதங்கள் ஒரு பக்கமும், ஆகமங்கள் ஒரு பக்கமும் ஆக; வலம் இடமாகச் சூழ்ந்து சூழ்ந்து ஆடுகின்றன, கூத்தாடிக்கொண்டு இருக்கின்றன. கூத்தர் தலைவன் வருகின்றான். வந்தவன் தன் கைப்பிரம்பினை ஓச்சுகின்றான். கூத்து ஓய்ந்துவிடுகிறது. இந்தக் காலத்து பாண்டு (Band) வாத்தியக் குழு ஒன்றை நினைவுக்குத் தந்து, அந்தக் குழு இசை துவங்க என்று ஒருவகையாயும், நிறுத்த என்று ஒரு வகையாயும், குழுவின் தலைவன் பிரம்பையோ தன் கையையோ ஓச்சும் நிலையை எண்ணிப்பாருங்கள். அந்த வண்ணம் நின்றுவிட்டது வேதாகமப் பவுரிக் கூத்து—எப்போது, எங்கே? எங்கள் பிள்ளையார்—ஆனந்தக் கண்துளி பெய்து, உச்சியினில் எடுத்தருளும் ஒரு திருக்கை



விரல் சுட்டி, விண் நிறைந்த பெருகொளியால் விளங்கும் மழவிடை மேலே பாவையுடன் எண்ணிறை கருணையினால் நின்றாரை எதிர்காட்டி யருளிய அப்போது, அங்கே தருக்கம் முதலிய தந்திரங்களுக்கு அப்பாற்பட்டுக் கடந்துள்ள கடவுளை, வேதாகமங்கள் காணமுடியாத மெய்ப்பொருளை, மூவரும் முப்பத்துமூவரும் காணாத நங்கள் பெருமானை, அடையாளங்களுடன் சாற்றித் தாதையார்க்கு "எம்மை இது செய்தபிரான் இவன் அன்றே" என்று கண்காணக் காட்டியே அருளினார் பிள்ளையார்.

ஒழிவிலொடுக்கத்து முதற்பாட்டின் முதல் கடைசி வரிகளின் திரண்ட பொருள் மேலே காட்டியது. அவ்வரிகள் "வேதாகமப் பவுரி வீசும் களாசநிலை......கருணை பொழிவா னெடுத்தகை" அருளானந்தத்தைப் பொழியா நின்ற, பிள்ளையார் உயர எடுத்துச் சுட்டோடு மெய்ப்பொருளைக் காட்டிய திருக்கரமானது, வேதாகமங்களினது பவுரிக் கூத்தினைப் பிரம்போடும் கைவாரங்கொண்டு வீசி நிறுத்தும் ஓர் உண்மைநிலை, என்பது பொழிப்பு.

"தோடுடைய செவியன், விடையேறி ஓர் தூவெண் மதிசூடி, பொடிபூசி..." என்ற வண்ணம் அங்க அடையாளங்களோடு பிள்ளையார் தாமும் கண்டு, பிறர்க்கும் காட்டியருளுபவர், "எனது உள்ளம் கவர் கள்வன்" என்றும், "பெம்மான் இவன் அன்றே" என்றும் எக்களிக்கிறார்.

இந்த ஒழிவிலொடுக்கத் திருப்பாட்டுக்கு உரை செய்ய வந்த திருப்போரூர் அடிகள், "தோடுடைய செவியன்" என்ற திருப்பாசுரத்தைத் "திருக்கடைக் காப்பு" என்று குறித்திருக்கிறார். "தோடுடைய செவியன்" என்ற தேவாரத்தைச் சொல்லி, "என்னும் திருக்கடைக் காப்பால்" என்றும், பின்னர் "இத்திருக்கடைக்காப்பு பிள்ளையார் ஞானபோனகம் உண்டருளியபோது அருளிச் செய்யப்பட்டது" என்றும் எழுதுகிறார். பிள்ளையாரது தேவாரப் பதிகங்களில் கடைசியனவாக நிகழும் திருப்பாசுரங்களையே "திருக்கடைக் காப்பு" என்பதுதானே வழக்கு? அப்படித்தானே சேக்கிழார் பெருமானும் வழங்கியிருக்கிறார்? தோடுடைய செவியனைப் பாடிய வரலாறு சொல்லி வரும் இடத்திலேயே "திருப்பதிகம் நிறைவித்துத் திருக்கடைக் காப்புச்

சாத்தி" என்று பேசுகிறார். செம்பொற்றாளங்கள் பிள்ளையார் கைத்தலத்துற்ற செய்தி சொல்லும்போது, "தமிழ்ப் பதிகம் எய்தப் பாடி...தக்க திருக்கடைக்காப்புச் சாத்தி நின்றார்" என்கிறார். "காரைகள் கூகைமுல்லை" எனச்சிரியற் பதிகம் பாடித் திருக்கடைக் காப்புத்தன்னில் நாரியோர் பாகர் வைகும் தனி - பள்ளி உள்குவார் தம்பேரிடர் கெடுதற்கு ஆணை நமது எனும் பெருமை வைத்தார்" என்று பாடுகிறார். இவ்வாறே பிள்ளையார் புராண முழுவதிலும் "திருக்கடைக் காப்பு" என்று கடைசிப் பாசுரங்களையே குறிப்பிடுகிறார் சேக்கிழார். ஆக, "ஒழிவிலொடுக்கத்து உரையில் திருப்போரூர் அடிகள் "தோடுடைய செவியனையே" திருக்கடைக் காப்பு என்பானேன்?

தேவாரம் என்ற திருப்பெயர், நம்பிகள் பாசுரங்களுக்கே ஒருகால் வழங்கியது என்றும், பின்னரே மற்ற இரு பெரியார் பாசுரங்களுக்கும் அப்பெயர் வழங்கலாயிற்று என்றும், அப்பர் திருப்பாசுரங்கள் திருநெடுந்தாண்டகம் என்றும், பிள்ளையார் பாடல்கள் திருக்கடைக் காப்பு என்றுமே வழங்கிவந்தன என்றும் சொல்லக்கேட்டிருக்கிறேன். இங்கே இப்போது நான் நினைவுறுத்த நினைவது, திருக்கடைக்காப்பு என்றே பிள்ளையார் தேவாரம் வழங்கிவந்தது என்பதற்கு, தக்க இலக்கியச் சான்று உள்ளது என்பதே.

இதன் தொடர்பாக எங்கள் வீட்டில் வழங்குவதொன்றைச் சொல்ல நினைக்கிறேன். எங்கள் வீடு என்றபோது, எங்கள் பரம்பரையையே உளங்கொண்டது. ஒழிவிலொடுக்கப் பரம்பரை என்றும், வள்ளலார் வழி என்றும் சொல்லிக்கொள்கிறோம். இங்கே வள்ளலார் என்றது காழிக்கண்ணுடைய வள்ளலை மட்டுமல்ல; ஒழிவிலொடுக்கம் செய்த அவரும் சேக்கிழாரும், வள்ளல் என்று வழங்கியிருக்கின்ற பிள்ளையாரை மட்டுமல்ல; பிள்ளையார் என்ற பெயருக்கே முதல்வரான முருகனையே குறித்து நிற்கும் வளவிய வண்மொழி. இவை பற்றியெல்லாம் இப்போது பேசாமல் (எனக்கு இந்த விவரங்களெல்லாம் தெளிவாய் முழுவதும் தெரியாது என்பதே உண்மை!), திருக்கடைக் காப்புக்கு வருகிறேன்; அதாவது இதன் தொடர்பாக எங்கள் பரம்பரையில் வழங்குவதைச் சொல்ல.



அதைச் சொல்லுமுன் ஒரு விளக்கம் தரவேண்டும். என் தந்தையார்தான் இதை எனக்குச் சொன்னது. ஆனால் அவர்கள் இதை வெளியிட அஞ்சியிருக்கிறார்கள். அச்சம் என்ற ஒரு கீழ்மையை அவர்கள்பால் ஏற்றுவதற்கு அடியேன் அஞ்சுகிறேன். அவர்கள் திருவடிகள் அடியேன் தலைமேல. தந்தை பிள்ளை, அண்ணன் தம்பி, தமக்கை தங்கை, கணவன் மனைவி என்ற வகையாகச் சில கருத்துக்கள் எங்கள் பரம்பரையில் வந்திருக்கின்றன. தீக்கை முதலிய உபதேசக்கிரமங்களுடன் அவ்வப்போது பக்குவம் நோக்கித் தரப்படுவன இக்கருத்துக்கள். ஆறு எழுத்து மந்திரம், இப்போது வழங்கிவரும் எதுவும் அல்ல; திருமுருகாற்றுப்படையில் வருவன ஆறு தலங்களல்ல, அது செந்தில் ஒன்றுக்கே உரியநூல்; திருமுருகாற்றுப்படை என்ற பாவினத்துக்கு இப்போது கூறிவரும் விளக்கமும் நாங்கள் சொல்லும் விளக்கமும் வேறு வேறு...என்பன போன்ற கருத்துக்கள். அநுமதியின்றியே சில கருத்துக்களை முன்னர் வேறிடங்களில் பேசிவிட்டேன். அப்பா கடிந்தார்களேனும் மன்னித்து விட்டார்கள். இப்போது அவர்கள் சம்மதம் பெற்றே பேசுகிறேன்.

எங்களிடையே வழங்கும் கருத்தை வெளியிடுவதாகக் கொள்ளவேண்டுமே ஒழிய, பிற கொள்கை எதையுமோ, பிறர் யாரையுமோ தவறு சொல்வதாகக் கொள்ளக்கூடாது. இப்படிப்பட்ட தப்புணர்ச்சிக்கு இடம் தருவானேன் என்பதுதான் என் தந்தையாரின் தயக்கம் எல்லாம். இளமை பயமறியாது என்பது என் நிலை. திரு. வி. க. இப்போது இல்லையே என்று ஏங்குகிறேன். கருத்து வேற்றுமைகளைப் பெரிதும் வரவேற்பதோடு, பாராட்டவும் செய்வார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன், அதுவும் ஓர் ஏழைப் பெண் சொல்லுவதென்றால்!

இவ்வளவு முன் எச்சரிக்கையுடன் சொல்ல வரும் கருத்து இதுதான். கடை என்று கதவு; காப்பு என்று அடைத்தல்; கடை காப்பு கதவடைத்தல். இது நிகழ்ந்தது வேதாரண்யத்திலே, மறைக்காட்டிலே கதவடைப்பை நிகழ்த்தியவர் பிள்ளையார். இந்தப் பெருநிகழ்ச்சி பற்றியே பிள்ளையார் பாடல்களெல்லாமே, கடைசிப் பாசுரங்கள் மட்டுமல்ல, திருக்கடைக் காப்பு என்னும் சிறப்புப் பெயர்

பெற்றன. இதுதான் எங்களிடை வழங்கும் கருத்தின் சுருக்கம்.

“முன்னாள் படியின் - மறை அருச்சித்துக் காப்புச் செய்த பைம்பொன் மணித் திருவாயிற் பாங்கு வந்தார்” என்றும், “அரு மறைகள் திருக்காப்புச் செய்து வைத்த அக்கதவம் திறந்திட அம்மறைகள் ஓதும் பெருகிய அன்புடை அடியார் அணைந்து நீக்கப் பெறுமையினால், அன்று முதலாகப் பின்னை ஒருபுடை ஓர் வாயில் அமைத்தொழுகும் தன்மை உள்ளபடி கேட்டருளி” என்றும், சேக்கிழார் பேசுகிறார். இது பிள்ளையார் புராணத்தில் அப்பர் வரலாற்றிலே—“மறைகள் அர்ச்சனை செய்து உரவங்கதவம் திருக்காப்புச் செய்த அந்நாள் முதல் இந்நாள்வரையும் அடைத்தே நிற்கின்ற மணிநீள்வாயில் வணங்குவார்” என்றும், “தொல்லை வேதம் திருக்காப்புச் செய்த வாயில் தொடர்வகற்றவல்ல அன்பர் அணையாமை மருங்கோர் வாயில் வழி எய்தி” என்றும் வருகிறது.

இப்பகுதிகளால் திரண்ட பொருள் இதுவே : வேதம் பூசித்துக் கதவை அடைத்தது, அவ்வேதம் திரும்பாமையால் கதவு திறக்கவில்லை—என்பது.

மேல் நிகழ்ச்சி : “அப்பரே, வேதவனத்து ஐயர் தம்மை அபிமுகத்துத் திருவாயில் திறந்துபுக்கே, எப்பரிசும் நாம் இறைஞ்சவேண்டும்; நீரே இவ்வாயில் திருக்காப்பு நீங்குமாறு மெய்ப்பொருள் வண்தமிழ்ப் பாடி அருளும்” என்று வேண்டிக்கொள்கிறார் பிள்ளையார். “என்னை இப்பரிசு நீர் அருளிச் செய்தீராகில் இது செய்வேன்” எனப் பதிகம் எடுத்துப் பாடுகிறார் தமிழ்மொழி வேந்தர். இது பிள்ளையார் புராணம் சொல்லுகிறபடி. இந்தப் பகுதியை அப்பர் வரலாறு இவ்வாறு பேசுகிறது. “ஓங்கு வேதம் அர்ச்சனை செய் உம்பர் பிரானை உள்புக்குத் தேங்காது இருவோம் நேர் இறைஞ்சத் திருமுன் கதவம் திருக்காப்பு நீக்கப்பாடும், அப்பர்! என, நீடுந் திருநாவுக்கரசர், உள் நீர்மையினால் பிள்ளையார் உரை செய்தருள அதனாலே, “பண்ணினேர் மொழியாள்” என்றெடுத்துப் பாடினார். திருக்காப்பு நீங்கத் தாழ்த்தது. தாழ்ச்சிக்குக் காரணம் ஏதும் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை பிள்ளையார் வரலாற்றிலே. ஆனால் அப்பர் வரலாறு, காரணத்தை—“பயன்



துய்ப்பான் திருக்காப்பு நீக்கத் தாழ்க்க” என்று காட்டுகிறது. திருநாவுக்கரசின் சொல்லிலும் பொருளிலும் இசையிலும் இவையெல்லாம் காட்டிய பரிவிலும் ஈடுபட்டுப் பெருமான் பாட்டின் பயனைத் துய்த்துக் கொண்டிருந்து விட்டான்! கடைசியாக “இரக்க மொன்றில்லீர்” என்று இறைஞ்சிப் பாடவும், கதவு திறந்தது.

அப்பரும், பிள்ளையாரும், உடனிருந்த அடியவரும் பதியவரும் ஆண்டவனை வணங்கினர், மீண்டனர். அப்போது அப்பர் பிள்ளையாரை நோக்கி “திறங்கிளர் மணிக்கபாடம் நீக்கமும் அடைப்பும் நிற்கத் திறந்தவாறு அடைக்கப் பாடியருளும் நீர்” என்றார். “அருமறைப் பிள்ளையாரும் இன் தமிழ்ப் பதிகப் பாடல் இசைத்திட இரண்டுபாலும் நின்ற அக்கதவு காப்பு நிரம்பிட அடைத்தது”. பிள்ளையார் வரலாறு இப்படிச் சொல்லும் இப்பகுதியை, அப்பர் வரலாறும்—“நிறைந்த கதவும் அடைக்கும் வகை நீரும் பாடியருளும்” என அப்பர் வேண்ட, பிள்ளையாரும் “பதிகம் பாடும் அவ்வளவில் கதவம் திருக்காப்புச் செய்தது எடுத்த திருப்பாட்டில்” என்று பேசுகிறது.

பின்னால் சொன்ன திருத்தொண்டர் புராணப் பகுதிகளால் திரண்ட பொருள் இதுவே : பூட்டிப் போன வேதம் திரும்பாமையால் அடைத்துக்கிடந்த கதவு, அப்பர் தமிழ்ப் பாட்டுக்குத் திறந்தது; அருமறைப் பிள்ளையார் பழையபடி மூடவும் செய்தார், இதற்கும் உதவியது தமிழ்ப் பாட்டே. வேதத்துக்கு உரிமை யற்றவர் என்று சிலர் குறை சொல்லுதற்குரிய நம் அப்பர் தமிழ் பாடித் திறப்பித்தார்.

இவ் வரலாற்றிலிருந்து, தேவாரம் வேத சாம்யம் என்று முடிப்பர் சிலர். வேதம் எங்களுக்குத் தெரியாது; தெரிந்துகொள்ளவும் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது; ஆனால் வேதம் பூட்டிய பூட்டுத் தேவாரத்தால் திறக்கப்பட்டு விட்டது; அந்தத் தெய்வத் தமிழ் எமக்குப் போதியது என்பது எங்கள் கொள்கை; நம்பிக்கை.

வேதங்கள் என்று சில, ஒரு காலத்தில் நடையாடின. அவையெல்லாம் நாளேற நாளேறக் காடுபட்டபடி பெருகிவிட்டன. இப் பெருக்கத்தாலே உண்மைப் பொருள்கள் புதைந்து போயின. இப்புதை பொருள்களைக் கண்டுகொள்ள மிகவும் அரும்பாடு படவேண்டி வந்தது. காடு

வெட்டிக் கான் பொருள் கொள்வதுபோல இந்த அரும் பாடு காணாதென்று, வேண்டாத பொருள்கள் பலவும், பரதார கமனம், புலாலுணவு போன்ற வெறுப்புக்குரிய பகுதிகளும், வேதங்களில் சேர்ந்துவிட்டன. ஆக, அவைகளைப் படிக்கலாகாது, கேட்கலாகாது, என்ற விலக்குகள் வந்தன. விலக்கப் படாதார்க்கும் பொருள்கள் துலங்கவில்லை. "திருவாய்மொழி செப்பலுற்றால்......மாமறையுள் அயிர்த்தார் அயிர்த்தபொருள் வெளியாம் எங்கள் அந்தணர்க்கே" என்பது கம்பரது கட்டுரை. பொய்கை முனி பூதத்தார் பேயாழ்வார்......என்றிவர்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" என்று வடகலையாசிரியர் வேதாந்த தேசிகர் சுருங்கச் சொன்னார்; நாங்கள் படிக்க, பாட, உரிமையில்லாத, கட்டுமீறிப் படித்தாலும் பயன் தாராத, வேதங்கள் வேண்டாம்; அவற்றுக்கு ஒத்த திறனுடைய, அவற்றினும் பார்க்க மேலான பொருளை எளிதில் நல்கவல்ல தமிழ்த் திருமுறைகள் போதும். வேதம் காணமுடியவில்லையே என்று ஏங்கிற்று: இதோ என்று கைதூக்கிச் சுட்டிக் காட்டிற்று தமிழ். பிள்ளையார் தேவாரம் திருக்கடைக் காப்பு: அது காப்பிட்ட கதவு காப்பு நெகிழவேண்டியதில்லை. தமது வள்ளன்மையால் திருவருள் பாலித்த தேவாரப் பாடல்கள் போதும் எல்லாப் பயனையும் பெற்றுக் கொள்ள.

"காதலியோடு பேசக் காதலன் வக்கீலுக்கு வக்காலத்துக் கொடுத்த கணக்குத்தான், தன் தாய்மொழியல்லாத வேற்றுமொழியில் பாட்டை அனுபவிப்பேன் என்பது" என்று தாகூர் சொல்லியிருப்பதாகக் கேட்டிருக்கிறேன். பிறந்து, மொழி பயின்ற பின்னெல்லாம் தன் நாவிலும் சுற்றிச் சூழவும் பழகி வளர்ந்த நமது பைந் தமிழ் வாயிலாக அன்றி, வேற்று மொழி வாயிலாக என்ன பயன் பெற்றுவிட முடியும்? இசைக்கு மொழி வேண்டாம் என்கிறார்கள்: சரியாக இருக்கலாம் செவியின்பத்தைப் பொறுத்தமட்டில். பொருளுணர்வு இல்லாவிட்டால், ஓசையின்பத்தைவிட வேறு பயன் என்ன பெறலாகும்? பயனுடைக் கலையே என்று ஈடுபடுகிறார் மணிவாசகர். கலையும் பயன் உடையதாகவே இருக்கவேண்டும். பேச்சு, எழுத்து, அல்லது



மொழி எங்கெல்லாம் வேண்டுமோ அங்கெல்லாம் தாய்மொழியே முயற்சிக்குத் தக்க பயனைத் தரும்; வேற்று மொழி உதவாது.

வேற்று மொழியால், பயன் குறைவு என்பதோடு மட்டுமின்றி, கேடும் விளையலாகும். இதை விரித்துப் பேச வேண்டியதில்லை.

நமது கோயில்களால் உண்மையான பயன் பெற வேண்டுமானால் தமிழில் பூசனை எல்லாம் நிகழவேண்டும். அர்ச்சனை மட்டுமல்ல, எல்லா நிகழ்ச்சிகளுமே தமிழில் நிகழவேண்டும். அர்ச்சனை தமிழில் இல்லையே என்று பேசும் வெறும் வாய்க்குத் தகுந்த பூட்டுப் போட்டிருக்கின்றனர் அறிஞர். நாளிதழ்களிலும், கிழமை, திங்கள் இதழ்களிலும் பல கட்டுரைகளும் வாதங்களும் வந்துள்ளன. வாதப் பிரதி வாதங்களை ஒழித்து இது செய்க என்று கட்டளையிட்டு நிறைவேற்றும் கட்டம் வந்துவிட்டது. தமிழகம், தமிழ்நாடு, என்று பேரில்லாவிட்டாலும், தமிழர் தமக்கென்ற நாட்டுப் பிரிவை அடைந்துவிட்டனர். தமிழ்தான் இந்த நாட்டு மொழி என்று அரசியலாரும் ஏற்றுக் கொண்டு சட்டமும் செய்துவிட்டனர். தமிழரசாட்சி கோயில்களில் துவங்காவிட்டால், வேறு எங்கே துவங்கும்? இந்து சமய அறநிலையத் துறைத் தலைவராகிய ஆணையரிலிருந்து, சின்னஞ்சிறு கோயிலில் தொண்டு செய்யும் சிறு தொழிலாளி வரை, இறை பணியாளர் யாவரும் இனி யாவற்றையும் தமிழிலேயே செய்யவேண்டும். இதைச் செய்விக்கும் கடமையோடு உரிமையும் நம் சமாசத்துக்கு உண்டு என்றால் மிகையாகாது.

இன்னுமொரு பெருங்குறை. அதைப் பற்றிச் சொல்லாமல் தீராது. சமயப்படிப்பு வேண்டாம் என்று நமது அரசியலும், கல்விப் பணியாளரும் ஒதுக்கியே விட்டனர். இந்த நிலை சரிதானா?

சமயம் என்பது பெரியவர்களால் சமைக்கப்பட்டு நமக்கென்று வைத்த வழி. வாழ்வின் உண்மையான பயனை உணர்த்தி எய்துவிக்கவல்லது.

மனித வரலாற்றை விருப்பு வெறுப்பற்ற கண்ணோடு பார்த்தால் இந்த உண்மை விளங்கும். ஒரு நாட்டின் நிலை தாழ்ந்தபோதெல்லாம் சமயம்தான் மக்களுடைய மனிதத்

தன்மையைக் காத்திருக்கிறது. நல்ல குறிக்கோளுக்காக வாழவும், ஏன், உளதாகும் சாக்காட்டையும் அதுதான் கற்றுத் தந்திருக்கிறது. மன்பதையை மனிதத்தன்மையிலிருந்து இழியாமல் அரணாக நின்று காத்ததும் சமயம்தான். உண்மையில் ஒன்றுபட்ட மனப்பான்மையை வளர்க்கவல்லது சமயம்தான். சமயம் என்ற இந்த உரத்திலிருந்துதான் நல்ல பண்பாட்டுப் பயிர் வளரமுடியும். நாகரிகத்தின் நாற்றங்கால் மட்டுமல்ல சமயம்; சமயமே நன்செய்ப் பயிர் எல்லாம்; பயிர்ப் பயனும் எல்லாம். பண்பாடு கல்வியால் வளரவேண்டிய ஒன்று என்பதில் யாருக்கும் ஐயம் இருக்கமுடியாது. ஆக, சமயச் சார்பற்ற கல்வி என்கிறார்களே! இது என்ன பொருளற்ற பேச்சு! இன்றைய கல்வி நிலை ஒழுக்கத்தை வளர்க்கலாம்; ஆனால் ஓர் அசையாத அடிப்படையாக நம்பிக்கை அமையாவிட்டால், வறட்டு ஒழுக்கம் நிலைக்கமுடியுமா? தனக்குச் சாதகமான சூழ்நிலை இருக்கின்றவரைதான் நிலைக்கும்; அந்தச் சூழ்நிலை கெடும்போது, ஒழுக்கம் நழுவிவிடும். நிலைத்த ஒழுக்கம் வளரவேண்டுமாயின் நம்பிக்கை வேண்டும். பாகற்காயைப் போன்ற கசந்த ஒன்றைத் தாய் நல்லது என்று சொல்லுவதால் தானே சாப்பிடுகிறோம்? இளம் வயதில் தாயின் மேல் வைத்த அந்த நம்பிக்கை தவறா? பாசத்தால் படர்ந்த நம்பிக்கையே உடலை வளர்க்க உதவிற்று என்கிறபோது, உள்ள வளர்ச்சிக்கும் எத்தனை தீவிரமான உணர்வு கலந்த நம்பிக்கை தேவை என்று எண்ணிப் பார்க்கவேண்டும். சமய வாழ்க்கையில் நம்பிக்கைதான் அடிப்படை. சில பல காரணங்களோடு அவ்வப்போது எழுந்த சில சமயக் கொள்கைகள் காலப்போக்கில் வெற்றுச் சடங்குகளாக மாறிவிட்டிருக்கலாம். நமக்கு இன்றைக்கு விளங்காத காரணத்தால் சில சமயச் சடங்குகள் நம்பத் தகாதவையாக; வேண்டாதவைகளாகத் தோன்றலாம். இவைகளைக் கொண்டு நம்பிக்கை தளரும்போதுதான் சமயமே தளர்ந்து வாழ்க்கையே மாய்கிறது. நம்பிக்கைதான் எல்லா வழியிலும் மனிதனைப் பண்படுத்தும். அறிவால் மட்டும் மனிதன் வாழ்ந்துவிட முடியாது; அன்பும் சேரும்போதுதான் வாழ்க்கை முழுமை பெறுகிறது. இந்த முழுமை சமயத்தின் சார்பிலேதான், அதன் அடிப்படையிலேதான் எழமுடியும்.



நமக்கு விளங்காமற் போனதாலேயே சில கொள்கைகளையும், சடங்குகளையும் வேண்டாதவை என்று ஒதுக்கிவிட முடியுமா? பிள்ளை பிறக்கும்பொழுது தந்தையை அடையாளம் தெரிந்துகொள்ளும் அறிவோடு பிறப்பதில்லை; ஆனால் பிறர்காட்டக் கண்டு கொள்கிறது. பிறர் சொல்தானே என்று வேறு வகையில் எண்பிக்க முயலுமா? கலையுரைத்த கற்பனையை எல்லாம் நிலை எனக் கொண்டாடக்கூடாது என்றாலும், நம்பிக்கை என்ற இன்றியமையாத கருவியைக் கைதளர விடலாகாது.

சமயத்தின் போக்கில் குறைபாடுகள் உண்டாகிவிட்டதால், சமயமே வேண்டியதில்லை என்று ஒதுக்கிவிடலாகாது. ஒழுக்கம் மட்டுமே போதாது; நிலைக்கவும் செய்யாது. சமயம் இல்லாவிட்டால் ஒழுக்கம் படம் இல்லாத சட்டம். வெறும் சட்டம் எவ்வளவு அழகாயிருந்தாலும், படத்தோடு பொருந்தும்போதுதான் பயன் உண்டாகிறது. அதைப் போல் ஒழுக்கம் சமயச் சார்பிலே எழும்போதுதான் நிலைத்து நிற்கமுடியும். இப்படிப்பட்ட ஒழுக்கம்தான் நமது ஆற்றலைத் தக்க வழியில் செலுத்தும். நமக்கும், நாட்டுக்கும் நல்லது செய்யும்.

இன்று சமயத்தின் நிலையென்ன? கோயில்கள் இருக்கின்றன; மடாலயங்களும் இருக்கின்றன; சில மேடைகளில் ஒலிபெருக்கியும் அலறுகிறது; சமயம் என்பது இப்படி முடங்கிவிட்டது. உண்மையான சமய வாழ்வு வாழ்கிற பெரியவர்களை விரல்விட்டு எண்ணவேண்டிய நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது. இந்த நிலை மாறவேண்டாமா? ஒரு நாட்டுக்கு உண்மையான ஆக்கவேலையைத் தரக்கூடிய மக்களைச் சமுதாயம் உருவாக்க வேண்டுமாயின், சமய வாழ்க்கை, பள்ளிகளில் துவங்கியே ஆகவேண்டும். வீட்டில் முளைக்கும் சமய உணர்வு பள்ளி என்ற நாற்றங்காலில் வளரவேண்டும். சமயமாகிய உரம் பெய்யாமல் வாழ்க்கைப் பயிர் வளம் பெறாது. வீட்டிலே வைத்தும், வெளியிலுமே தாய்மார்களின் பணி என்ன என்று மங்கையர்க்குத் தனியரசியும், திலகவதியாரும் காட்டியுள்ளனர். அத்தகையோர் காட்டியுள்ள பண்பாட்டினால்தான் விஞ்ஞானத்தால் கிடைக்கின்ற புதிய ஆற்றல்கள் அழிவு வேலைக்காகாமல் ஆக்க வேலைக்கு ஆகும்; மன்பதை உண்மையான வாழ்ச்சிபெறும்.

சமயம் பற்றிச் சொல்லிக் கொடுப்பது, நாட்டில் பல சமயத்தார் இருப்பதால் பூசலை விளைவிக்குமென்று நினைக்கிறார்கள். சமயப் பூசல் இருக்கக்கூடாது என்பதற்கு சமயத்தையே ஒழித்துவிடுவது என்பதா பொருள்? முள் இருப்பதால் ரோசா மலரை யாரும் பறிக்காமல் இருப்பதில்லையே! மனிதனுடைய உண்மையான வளர்ச்சி உள்ளத்தையும், மூளையையும் பொறுத்தவரைதான், உடலின் தன்மையால் அல்ல, என்கிறது விலங்கியல் நூல், அதன் உயிர் நிலையான உள்ளது சிறத்தல் (Evolution) என்ற பகுதியில். சமயத்தையே ஒழித்துவிட்டால், மனிதன் உடலால் போரிட்டுத் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிய அந்தப் பழைய, காட்டு நிலைக்குத்தான் போக முடியுமே அல்லாது, மனிதப் பண்பை வளர்த்துக்கொள்ள ஒருநாளும் முடியாது. நடந்த உலகப்போர் அத்தனையும் இந்த நிலையைத்தானே மெய்ப்பிக்கின்றன? பகையை ஒழிப்பது என்றால் பகைவரை அழிப்பது அல்ல; பகைமை உணர்ச்சியை மாற்றுவதுதான் உண்மை வெற்றி. வேல் கொண்ட வெற்றியினை நினைவு கூர்க. மாற்றானை மாற்றுயர்ந்த பசும் பொன்னாக்கிவிட்டதே! வேலோடு மயிலையும் சேர்த்தேயன்றோ வெற்றிவேலனைப் போற்றுகிறோம்! சமயப் படிப்பினால் பண்படுகின்ற உள்ளம் சாதி சமயச் சழக்கில் ஒருநாளும் ஈடுபடாது; பூசலிட விழையாது.

சிலர் எல்லாச் சமயத்திலும் உண்மை இருக்கிறது. எனவே, இதில் கொஞ்சம், அதில் கொஞ்சம் என்று பிய்த்து வைத்துக்கொண்டு "எம்மதமும் சம்மதமே; இதுதான் எம் சமயம்" என்று சொல்லுகிற மனப்பான்மையை வளர்த்திருக்கிறார்கள். இதை எண்ணும்போது பூக்குவளையில் வைக்கும் பூங்கொத்து நினைவுக்கு வருகின்றது. ஒவ்வொரு பூவும் ஒவ்வொருவிதமாய் அழகாய் இருக்கிறது. தன் தாய்ச்செடியில் இருக்கும்வரைதான் தன் பண்பாகிய மணத்தைப் பரப்புவதோடு தன் பயனாகிய பழத்தினையும் நல்கும். எல்லாப் பூக்களையும் பறித்து ஒன்றாக ஒரு பூக்குவளையில் வைத்துவிட்டால், சிறிதுநேரம் பார்க்க அழகாக இருக்கலாம். ஆனால் அந்த மலர்க்குவியலுக்கு ஒரு மலருக்கு உள்ள உயிர்த்தன்மை உண்டா? சிறிது நேரத்தில் அத்தனையும் வாடிவிடும். இதைப்போலவே, தோன்றுகிறது இந்தப்



பரந்த மனத்தை உடைய அன்பர்களது சமய நிலையும். மற்றவர் எவ்வளவு அழகாக இருந்தபோதிலும், பெற்றவளிடம் தானே அம்மா என்று கனியமுடியும்? ஆனால் சிலர் தம் சமயத்திலே குறைபாடு இருக்கிறதே என்று பிற சமயத்துக்குப் போகிறார்களே! இந்த மனநிலை எனக்கு விளங்குவதில்லை. ஒருவனுக்குக் கருவிலிருந்து ஊறிவந்த தாய்மொழியும், சமயமும்தான் உண்மையான உணர்வூட்ட முடியும், உள்ளத்தை வளர்க்கமுடியும். வேறு ஒரு சமயத்தின் கோட்பாடுகள் என்னதான் நன்றாகத் தோன்றினாலும் உயிரை வளர்க்குமா? எனவே பிள்ளைகள் சமயப் பாடமும் படிக்கவேண்டும்; அதுவும் வெறும் பொதுக் கொள்கைகளாகவும், கருத்துக்களாகவும் படிப்பதில் பயனில்லை. தன் சமயம் காட்டும் வழியிலேதான் பயிற்சிபெற வேண்டும். காந்தியண்ணல் தம் சமயம் தம் மனைவிபோல என்றார். என் சமயம் என் தாய்போல என்பேன். மாற்ற எண்ணினாலும் மாற்ற ஒண்ணாது.

நம் சைவ சமயம்தான் என்ன குறையை உடையது? குறுகிய எல்லையில் நிற்கவில்லையே? நடைமுறையில் நாளாவட்டத்தில் ஒட்டிவிட்ட ஒட்டடை இங்கும் அங்கும் உண்டு. உழவாரப் படை கொண்டு, திருவலகு பரிமாறிவிட்டால் போதும். அப்பரும், பிள்ளையாரும், அம்மையாரும் பிற பேரறிவாளர்களும் வளர்த்த அருஞ்சமயம் தமிழால் வளர்ந்த பெரும் சமயம், நல்ல பண்பாட்டையே வளர்க்கும், நல்ல வாழ்வையே நல்கும். தமிழ் மூலமே இந்தச் சமயம் கோயில்களிலும், பள்ளிகளிலும், இளம் நெஞ்சங்களில் குடியேறினால், உருவாகி வருகின்ற "தமிழ் நாடு" என்று பெயரிடப்படாத நம் தமிழகம் நல்ல ஆக்கம் பெறும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் வகையையும், உயிருக்கு உய்தியையும் தரவல்ல உண்மையான உயிர்க் கல்வி சமயம்தான். இந்தப் பாடத்தை, மற்றப் பாடத் திட்டங்களோடு சேர்த்து அமைத்து, புதிய பாடத் திட்டத்தைக் கொண்டு வந்து, சமயத்தையும், அதன் மூலம் நாட்டின் ஆக்கத்தையும் வளர்க்குமாறு, இந்தத் துறையில் பொறுப்பேற்றுள்ள பெரியவர்களுக்கு என் வேண்டுகோள்.

நமது பொதுக் காரியதரிசியவர்கள் எனக்கு இட்ட கட்டளை ஒன்று—என் பேச்சைக் கட்டுரையாக எழுதி,

அச்சேற்றி, இம்மாநாட்டிலே வழங்கவேண்டும் என்று கட்டுரையாக எழுதாவிட்டாலும் பேச்சாக எழுதினேன். அவர்களது அன்புக் கட்டளையை அறவே மறுத்துவிட அஞ்சி. என் தந்தையார் போலவே என்னை ஏவல்கொள்ளும் உரிமை உடையவர்கள் அவர்கள். ஆயினும் அச்சிடுதல் என்ற அளவுக்கு எனக்குத் துணிவு பிறக்கவில்லை. அச்சேற்றும் அளவுக்கு அருமை ஒன்றும் என் பேச்சில் இல்லை என்று என் எண்ணம். ஆயினும் எழுதாக் கிளவி இது. அதாவது எழுத்துக்குள் முழுவதும் அமையாத மழலை மொழி இது என்று, அன்பின் கெழுதகைமையால் அமைச்சரவர்கள் அச்சிட விரும்பினால், உரிமை அவர்களிடமே. சித்தாந்த இதழ்களில் பகுதி பகுதியாகவோ, தனித்த இதழாகவோ, அச்சேற்றும் உரிமையை என்னைக் கேளாமலே அவர்கள் எடுத்துக்கொள்ளுதற்கு உரியர்.

தோதுந்துக்கூறி முடித்துக்கொள்வேன். அறிவும் அன்பும் இணைந்து செல்லாமல் முழுவாழ்வு அமையாது. மூளையும் வேண்டும், நெஞ்சும் வேண்டும். வெறும் அறிவு கடைபோகாது; அன்பே கடைத்தேற்றவல்லது. அன்பே சமயத்தின் உயிர்நிலை. சமய வாழ்க்கையே உண்மையான வாழ்க்கை. சமயமே வாழ்க்கையின் உண்மையான பயனை நல்கவல்லது. சமயம் மன்பதையில் பற்பல உருவிலே தோன்றி, நிகழ்ந்தபோதிலும், நமக்கு நம் தாய்ச் சமயமே கை தந்து வாழ்விக்கவல்லது. தாய்மொழி வழியேதான் இதுவும் நிகழற்பாலது. வேற்றுமொழி வேதனை வேண்டியதில்லை—உண்மையை அறிய உய்தியைப் பெற. சமயக் கல்வி விலக்கக் கூடாத ஒன்று, இன்றியமையாத ஒன்று. தாய்ச் சமயத்தைத் தாய்மொழியிலே கற்றுத்தரவேண்டும். உலகெலா முணர்ந்து ஓதற்கு அரிய பெரிய பொருளினை அங்க அடையாளங்களோடு கண்ணாரக் கண்டு காட்டவும் வல்லது—நம் செந்தமிழ்ச் செந்நெறி. வேதம் ஒரு அரண்யம். எங்கும் உள்ள செம்பொருள் வேதங்களிலும் மறைபொருளாகக் கிடந்தது. மறைக் காட்டிலே மறைந்து புதைபுண்ட பொருளைக் காப்பு நீக்கிக் காட்டியது செந்நெறித் தமிழ். காப்பு நீக்கிக் காட்டியவர் நம் தமிழ்மொழி வேந்தர், மறைக் கதவம் திறக்கப்பட்டு விட்டாலும், மீண்டும் திருக்கடைக் காப்பு நிகழ்ந்தது. நிகழ்த்தியவர் நான்மறைப் பிள்ளையார். நமக்கு உரிமை மறுக்கப்பட்டுள்ள அந்த வேதத்தில் நமக்கு மோகம் ஏன்? செந்தமிழினைக் கொண்டே நாம் உய்தி பெறவேண்டும்.

வாழ்க நம் தமிழ்! வெல்க நம் தமிழ் நெறி!

இங்கே இந்த பெருவாய்ப்பையும், பெரு மதிப்பையும் எனக்குத் தந்து உதவிய பேரன்பர்களுக்கும், சிறப்பாக நமது பொது அமைச்சரவர்களுக்கும், பொறுமையோடு என் புல்லுரையைக் கேட்டருளிய தங்கள் பொன்னார் திருவடிகளுக்கும் நன்றியும், வணக்கமும்.

---



## அறிக்கைகள்

அறநிலையப் பாதுகாப்பிலாகாவில் சமயப் பிரசாரகராக நியமனம் பெற்றுள்ள தமிழாசிரியர் திரு. ஆர். பஞ்சநதம் பிள்ளையவர்களைப் பாராட்டிப் பொன்னாடையும் "வரலாற்றுச் செல்வர்" என்ற பட்டமும், சிராப்பள்ளி மலைக் கோயில் 100 கால் மண்டபத்தில் 27—1—57-ல் வழங்கப் பெற்றன.

**சமணர் மலை செல்வோம்:** (ஆசிரியர் ஜீவபந்து டி.எஸ். ஸ்ரீபால், 132, தங்கசாலைத் தெரு, சென்னை-1. விலை அணா 8) இந்நூலில், மதுரைக்கு மேற்கே 5 மைல் தூரத்திலுள்ள சமணர்மலையின் வரலாறு, அதிலுள்ள பல கல்வெட்டுக்கள், சிற்பங்கள், இவற்றின் புகைப் படங்கள், சரித்திரச் சான்றுகள், ஆங்கில மொழிபெயர்ப்பு, சமண சமய நுட்பங்கள் முதலியன சுமார் 70 பக்கங்களில் விரிவாக் கூறப்பட்டுள்ளன. சரித்திர மாணவர்கட்கும், சமயப் பேரறிஞர்கட்கும் தேவையான சிறந்த நூல்.

கோலாலம்பூரில் 163 ஹை ஸ்ட்ரீட்டில் இருக்கும் திரு. கே. சிவநேயன் அவர்கள் 18—1—1957-ல் திரு. ம. பா. அவர்களைச் சந்தித்து, தமக்கும், திருவாளர்கள் என். பொன்னையா, என். கார்த்திகேசு, எஸ். தில்லையம்பலம், சி. குழந்தைவேல், வி. நரசிம்மன், எம். எஸ். சுப்பையா, என். கே. பிள்ளை, சி. ராமசாமி, ஏ. மாணிக்கம் (ஆக பதின்மர், இவர்கள் அங்கத்தினர் எண்கள் முறையே 4006, 4013, 4010, 4008, 3881, 3877, 3879, 4007, 3873, 4005) ஆகி

[illegible] காப்பக
209304

[illegible]யாருக்கும் 1957-ம் வருடத்திற்குரிய சந்தாத்தொகை ரூபா நாற்பதையும் நேரில் செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டார்கள். மலேயா வாசிகளுக்கு 1956ஆ டிசம்பர் மாத இதழ் முழுமையும் [illegible] பெற்றுக் கொண்டார்கள். 1957ஆ ஜனவரி [illegible] இதழ்கள் ஆயுள் அங்கத்தினருக் கும் [illegible] பதின்மருக்கும் மட்டும் 10-2-57-ல் தபாலில் அனுப்பப்பெறும். ஏனையோர் சந்தாவை நேரில் அனுப்புக. அவர்கட்கு வி. பி. அனுப்பப்படமாட்டது.

**மலேயாவில் தேவாரம் அடங்கன்முறை விற்பனை:** மயிலைகிழார் இளமுருகனார் எனும் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் 1953-ல் வெளியிட்ட தேவாரம் அடங்கன்முறைப் பதிப்பு, மலேயாவில் கிளாங்கு (Klang) டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரியிலுள்ள திரு. ஆர். வி. கந்தையா அவர்களிடம் கிடைக்கும். விரைந்து பெற்றுக்கொள்க. ஆறு மாதங்கட்குள் ஆயிரம் பிரதிகட்குக் குறையாமல் விற்று முதல் செய்யப்பெற்றால், 1935-ல் வெளிவந்த திருப்புகழ் பதிப்பு இரண்டாம் பதிப்பாக விரைவில் அச்சு வேலை தொடங்கி வெளியிடப்படும்.

**நூல் நிலையங்கட்கு அனுமதி:** மயிலை கிழார் இளமுருகனார் வெளியிட்டுள்ள ஷை அடங்கன்முறைப் பதிப்பு எல்லா நூல் நிலையங்களிலும், கல்லூரி உயர்நிலைப்பள்ளி முதலியவற்றிலும் வாங்கலாம் என்று சென்னை மாநில கல்வித் தலைமை யதிகாரி உத்தரவளித்துள்ளார்.

**அகஸ்தியர் மணி விழா:** திருப்பாதிரிப்புலியூர் அகஸ்திய ஔஷதாலயம் - திருமந்திர மணி, வைத்யரத்ன பு. வே. தேவராஜ முதலியாரின் மணி விழாவில் (24-1-57) சமாஜச் சார்பில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் மனம் கனிந்த ஆசியுரை வழங்கினார்கள். திரு. புலவர்-முருகவேள் பாமாலையால் சிறப்பித்தார்கள். விழாவில் சமாஜ அன்பர்கள், உற்றார், உறவினர் போந்து, மணி விழாத் தலைவர் கடலூர் நகராட்சி உறுப்பினராகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழக உறுப்பினராகவும் ஆற்றிய பணிகளையும், சிறப்பாக அவரது துறை தேர்ந்த சமய நூல் அறிவினையும் சமய வாழ்க்கையையும் நாட்டு வைத்தியத் தொண்டையும் பாராட்டினார்கள்.

R. V. கோபால், R. K. கிருஷ்ணசாமி, தர்மலிங்கம் செட்டியார், கோபால் செட்டியார்; வடஆர்க்காடு: புரிசை முருகேச முதலியார், வா. கி. ஜானகிராம முதலியார், வரதராஜுலு செட்டியார், மாணிக்க உடையார், V. R. சீதாபதி; தென்ஆர்க்காடு: ஆடூர் இரத்தினசபாபதிப் பிள்ளை, செ. இரத்தினசாமி செட்டியார், சின்னையா முதலியார், வாகீசம் பிள்ளை, K. M. R. பெரியதம்பி, A. இராமகிருஷ்ணப் பிள்ளை, அண்ணாமலை உடையார், மு. சின்னசாமி செட்டியார்; செங்கற்பட்டு; வீ. திருஞானசம்பந்த முதலியார், சி. காளத்தியப்ப முதலியார், வரதராஜ முதலியார், வா. தி. மாசிலாமணி முதலியார்; தஞ்சாவூர்: மஞ்சட்கொல்லை. R. M. S. சம்பந்தமூர்த்தி முதலியார், சிங்காரஞ் செட்டியார், திருவாரூர் மகாதேவ முதலியார், மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்; திரிசிராப்பள்ளி: S. கனகசபாபதிப் பிள்ளை, R. பஞ்சநதம் பிள்ளை, வரதராஜுலு செட்டியார், வரதராஜப் பிள்ளை; கன்னியாகுமரி: C. வள்ளிநாயகம் பிள்ளை, பி. நாகமணி பிள்ளை, சைவப் புலவர் பகவதிப்பெருமாள் பிள்ளை, S. கோலப்பன்; மதுரை: கருமுத்து தியாகராச செட்டியார், ஸர். பி. டி. ராஜன், க. ரங்கசாமி முதலியார்; இராமநாதபுரம்: Rm. AM. அண்ணாமலை செட்டியார்; முத்த. வே. சொக்கலிங்கம் செட்டியார், PL. TL. தேனப்ப செட்டியார், சேவு. மெய்யப்ப செட்டியார், சா. கணேசன், சொ. நாராயணன் செட்டியார், பழ. நாராயணன் செட்டியார், பாலகவி. இராமநாதன் செட்டியார், ராம. சொ. திருநாவுக்கரசு செட்டியார்; திருநெல்வேலி: ஆறுமுகசாமி நாடார், மறை-திருநாவுக்கரசு; பெங்களூர்: ஆ. ர. அண்ணாமலை முதலியார்; புதுச்சேரி: கிரந்தை பாலசுப்பிரமணிய செட்டியார், ஏ. எஸ். கந்தசாமி பிள்ளை, எஸ். சென்னியப்ப முதலியார்; கொழும்பு: ஸர். கந்தையா வைத்தியநாதன், சு. நடேசப் பிள்ளை, அருள் தியாகராசா, T. S. சோமசுந்தரம்; யாழ்ப்பாணம்: வ. நாகலிங்கம், ஏ. அருளம்பலம், முத்துத்தம்பி, அம்பிகைபாகன்; மலேயா: கா. இராமநாதன் செட்டியார், சிவநேயன், கோவிந்தசாமிப்பிள்ளை, அ. மு. அ. பெரியசாமிப் பிள்ளை, பழனிவேல் பிள்ளை, R. V. கந்தையா.

# சைவ சித்தாந்த மகா சமாஜம்,

# பொன்விழா மலர்.

மிக மிகக் கவர்ச்சியான வெளியீடு. இதில் ஐம்பத்தெ கட்டுரைகள் உள்ளன. சமாஜத்தின் ஐம்பது ஆண்டுகளி நிகழ்ச்சிகள் தெளிவாக எழுதப் பெற்றுள்ளன. ஐ ஆண்டுகளில் நடந்த நிறைவு விழாக்களின் தலைவர்க நடைபெற்றஇடங்கள்; மங்கையர் மாநாடு, இளைஞர் மாநா விவரங்கள் ; சமாஜத் தொண்டர்கள் தொண்டாற்றுரு பற்றிய குறிப்புக்கள்; உயர்திருவாளர்கள்: ஞானியார் சுவ கள், மறைமலையடிகள்,ஜே.எம்.நல்லசாமிப்பிள்ளை, ஸர். பொ ன்னம்பலம் இராமநாதன்,பொன்விழாத்தலைவர் கனம் சு. நடே பிள்ளை, திரு.வி.க. முதலிய முப்பதின்மர் உருவப்படங்க வேறு பற்பல சிறப்புக்கள் இதில் மிளிர்கின்றன. கட்டு யாளர்களுள் டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார், டாக் வ. ஆ. தேவசேனாபதி, தணிகைமணி ராவ்பகதூர் வ. செங்கல்வராயப் பிள்ளை, சிவக்கவிமணி சி. கே. சுப்பிரம முதலியார், சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேல் முதலிய சித்தாந்த ரத்னாகரம் முத்து சு. மாணிக்கவாசக முதலி திரு. அ. மு. பரமசிவானந்தம் முதலியோர் உள்ளனர். நூற்று நாற்பது பக்கங் கொண்ட அழகிய பதிப்பு.

விலை ரூபா ஒன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அ பன்னிரண்டு. உடனே முன்பணம் அனுப்பிப் பெற் கொள்க. வி. பி. மூலம் அனுப்பப்படமாட்டாது.

கிடைக்கும் இடம் :

**பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1**

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali St Royapettah by D. Mangayarkarasi and V.K. Punithavathi, Ed by C M Ramachandran Chettiar, B.A., B.L., and Publishe S.Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddh Maha Samajam, 2, Seetha Rama Nagar, Cuddalore N. T.